பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper .

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 சித்திரை 04 ஞாயிற்றுக்கிழமை (16-04-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:120

# நிரந்தர தீர்வை எட்டிய பின்னரே படைகளை வாபஸ் பெற முடியும்!

## அன்ரன் பாலசிங்கத்தின் பேட்டிக்கு வெளிவிவகார அமைச்சு பதில்

யாழ்ப்பாணம்,ஏப்ரல்16

**இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் விடயத்தில், நிரந்தர அரசியல் தீர்வு ஒன்றை எட்டிய பின்னரே வடக்கு - கிழக்குப் பகுதிகளில் இருந்து படையினரை வாபஸ்பெற முடியும் என்று இலங்கை வெளிவிவகார அமைச்சு நேற்று வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.**

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் லண்டனில் இருந்து வெளிவரும் 'தமிழ் கார்டியன்' பத்திரிகைக்கு அண்மையில் வழங்கிய பேட்டி ஒன்றில் தெரிவித்த கருத்துக்களுக்கு பதிலளிக்கும் விதத்தில் இந்த அறிக்கையை வெளிவிவகார அமைச்சு தற்போது வெளியிட்டுள்ளது.

"போர் நிறுத்தம் செய்து பேச்சுக்களை ஆரம்பிக்க நாம் தயார். பேச்சுக்கள் ஆரம்பித்ததும் வடக்கு - கிழக்கில் நிலைகொண்டிருக்கும் படைகள் முகாம்களுக்குள் முடக்கப்படவேண்டும் அத்துடன் போர் நிறுத்தத்தைக் கண்காணிக்க குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும்" என்று அன்ரன் பாலசிங்கம் தனது

(12ஆம் பக்கம் பார்க்க)

## 8 குடும்பங்கள் மருசுவில் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம்,ஏப்.16

பளை பிரதேச செயலர் பிரிவிலுள்ள மாசார்,தர்மக்கேணி கிராமங்களிலிருந்து நேற்று 8 குடும்பங்கள் தாம் விரும்பிய இடங்களுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டன.

அவர்கள் தமது சொந்த விருப்பத்தின்பேரில் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லப்போவதாக தெரிவித்ததன் பேரில் படையினரால் விண்ணப்பப்படிவம் வழங்கப்பட்டது என்றும் - அதனைப் பூர்த்தி செய்து கொடுத்தபின்னர் அவர்கள் வெளியேற அனுமதிக்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த 8 குடும்பங்களும் மூடை முடிச்சுகளுடன் நேற்று மாலை மிருசுவில் பகுதியை வந்தடைந்தன.

(இ-5)

## திருமலையில் தேடுதல்

திருகோணமலை,ஏப்.16

திருகோணமலை, உவர்மலை ஆசிரியர் சதுக்கம் நேற்றுக் காலை பொலீஸாரினாலும், இராணுவத்தாலும் சுற்றிவளைக்கப்பட்டுத் தேடுதல் நடத்தப்பட்டது.

வீடு வீடாகத் தேடுதல் நடத்திய படையினர் வீட்டிலிருந்தவர்களை உவர்மலை குழந்தை யேசு ஆலயத்துக்கு அழைத்துச் சென்று அடையாள அட்டைகளைப் பார்வையிட்ட பின்னர் விடுவித்தனர்.

(இ-5-150)

## 390 குடும்பங்களை வெளியேற்றுவது குறித்து மனித நேய அமைப்புகள் இன்று ஆராயும்

யாழ்ப்பாணம்,ஏப்.16

பளை உள்ளிட்ட பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் இருந்து இன்னமும் வெளியேற முடியாது சிக்குண்டுள்ள பொதுமக்களை அங்கிருந்து பாதுகாப்பான இடங்களுக்கு அகற்றுவது தொடர்பான அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து மனிதநேய அமைப்புக்களும் மதத்தலைவர்களும் ஒன்று கூடி இன்று ஆராயவுள்ளனர்.

சோரன்பற்று, மாசார், சின்னத்தாழையடி, தர்மக்கேணிப் பகுதிகளில் சுமார் 390 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் சிக்குண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-6)

### டோறாப் படகுகள் தகர்ப்பு:

## கரை ஒதுங்கிய சடலங்களில் நான்கு இங்கேயே அடக்கம்!

### அடையாளம் காணமுடியவில்லை

யாழ்ப்பாணம்,ஏப்.16

வடமராட்சி கிழக்கு கடற்பகுதியில் கரையொதுங்கிய கடற்படையினரின் ஏழு சடலங்களில் நான்கு சடலங்கள் அடையாளம் காணமுடியாமல் இருப்பதால் அவை கீரிமலையில் அடக்கம் செய்யப்படவுள்ளன.

நாகர்கோயில் கடலில் கடந்த ஏழாம் திகதி மூழ்கடிக்கப்பட்ட டோறாப் படகுகளில் இருந்து காணாமற்போனவர்களின் சடலங்களில் ஏழு சடலங்கள் இதுவரை கரை ஒதுங்கின.

இவற்றில் அடையாளம் காண

(12ஆம் பக்கம் பார்க்க)

## லங்காமுடித்த நாளை திருமலை புறப்படும்

### பயணிகளை இன்று வருமாறு அழைப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.16

லங்கா முடித்த பயணிகள் கப்பல் சேவை நாளை திங்கட்கிழமை காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையில் நடைபெறவுள்ளது.

காங்கேசன்துறையிலிருந்து நாளை புறப்படவுள்ள இந்தக் கப்பலில் பயணம் செய்பவர்களை இன்று ஞாயிறு காலை 8.30 மணிக்கு மதிய உணவு மற்றும் பயண ஏற்பாடுகளுடன் சிங்கள மகாவித்தியாலயத்துக்கு சமுகம் தருமாறு யாழ்.சிவில் நிர்வாக அலுவலகத்தினால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

கப்பலில் பயணம் செய்வதற்கு ரிக்கெட் வைத்திருப்போர், இருவழிப் பயண ரிக்கெட்டுடன் விமானம் மூலம் வந்தோர் ஆகியோருக்கு இன்றைய பயணத்தில் முன்னுரிமை வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இம் முறை இந்தக் கப்பலில் 550பேர் மட்டுமே அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

இவர்களில் 400பேர் யாழ்ப்பாணத்தில் இருந்தும் 150பேர் பருத்தித்துறையிலிருந்தும் அழைத்துச் செல்லப்படுவர் என்று சிவில் நிர்வாக அதிகாரி தெரிவித்தார்.

(இ-5-9-10)

## மேலும் ஒரு தொகுதியினர் வெளியேற இன்று அனுமதி

யாழ்ப்பாணம்,ஏப்.16

பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் சிக்குண்டுள்ள மக்களில் மேலும் ஒரு தொகுதியினர் இன்று தாம் விரும்பிய இடங்களுக்குச் செல்ல அனுமதிக்கப்படுவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை காலமும் மக்கள் வெளியேறமுடியாத நிலையில் இருந்த சோரன்பற்று, மாசார், தர்மக்கேணி பகுதிகளில் உள்ள மக்களே வெளியேற அனுமதிக்கப்படவுள்ளனர்.

படையினரின் அனுமதி கிடைத்ததும் பளையை விட்டு வெளியேறும் இவர்கள் மிருசுவிலை வந்தடைந்து தாம் விரும்பிய இடங்களுக்குச் செல்வார்கள்.

பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் யுத்தம் ஆரம்பமானதையடுத்து ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வெளியேற முடியாத நிலையில் இருந்தனர்.

விடுதலைப் புலிகள் விடுத்த அறிவிப்பினைத் தொடர்ந்து ஆயிரத்து ஐநூறு பேர் மட்டுமே பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

தொடர்ந்து பல்வேறு மட்டங்களிலிருந்தும் விடுக்கப்பட்ட நெருக்குதல் மற்றும் அழுத்தம் காரணமாக வண்ணான்கேணியிலிருந்து 750 பேர் கடந்த வாரம் வெளியேற அனுமதிக்கப்பட்டனர்.

(இ-5)

## காணாமற்போன கிராம சேவையாளர் வன்னியில்!

வடமராட்சி கிழக்குப் பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின்போது காணாமல் போன இரு கிராமசேவை உத்தியோகத்தர்கள் வன்னியில் பாதுகாப்பாக இருப்பதாக அங்குள்ள செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுப் பிரதிநிதிகளினால் வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

உடுத்துறை வடக்கு கிராம சேவை உத்தியோகத்தர் எஸ். தவராசா, தாளையடி கிராம சேவை உத்தியோகத்தர் எஸ். யோசெப் ஆகியோரே வன்னியில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவர்கள் பற்றிய மேலதிக விவரம் எதுவும் தெரியவரவில்லை

(இ-5)

## துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் நீதிமன்றில் இளைஞன் ஆஜர்

மட்டக்களப்பு,ஏப்.16

மட்டக்களப்பு சந்திவெளிப் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் மட்டக்களப்பு நீதிமன்றில் நேற்று ஏறாவூர் பொலீஸாரால் ஆஜர்படுத்தப்பட்டார்.

விநாயகமூர்த்தி விநாயநாயகம் (வயது 23) என்ற இளைஞரே இவ்வாறு ஆஜர்படுத்தப்பட்டவராவார்.

இவர் விடுதலைப்புலிச் சந்தேகநபர் என்று பொலீஸார் தெரிவித்ததை அடுத்து இளைஞரை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் -

சிறை அதிகாரிகளின் காவலுடன் இளைஞனுக்கு மட்டக்களப்பு வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்கும்படியும் - நீதிபதி உத்தரவிட்டார்.

கடந்த வியாழனன்று இடம்பெற்ற மோதல் ஒன்றின்போது இவர் காயமடைந்ததாகவும் -

அவருடன் சென்று கொண்டிருந்த இரு புலிகள் அமைப்பு உறுப்பினர்கள் தப்பிச் சென்றுவிட்டனர் என்றும் - சந்திவெளி இராணுவ முகாம் பொறுப்பதிகாரி நீதிமன்றில் சமர்ப்பித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

(இ-6)

## யாழ்.கல்வி அலுவலகம் முன் நாளை மறியல் போராட்டம்!

யாழ்ப்பாணம்,ஏப்.16

ஆரம்பக்கல்விப் பாடநெறி ஆசிரியர் நியமனத்துக்கென விண்ணப்பித்து நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படாதவர்கள் ஏனையபாட நெறிகளுக்கு நேர்முகப்பரீட்சை நடைபெறவுள்ள யாழ்.வலயக் கல்விப் பணிமனையின் முன்பாக நாளை திங்கட்கிழமை மறியல் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

நாளை காலை 7மணிக்கு இந்த மறியல் போராட்டம் நடைபெறவுள்ளது. தொடர்ந்து நேர்முகப்பரீட்சை நடைபெறவுள்ள 19 ஆம், 20 ஆம் திகதிகளிலும் மறியல் போராட்டம் நடைபெறும் என்று அதன் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

கடந்த 3ஆம் திகதி சங்கீத, நடன ஆசிரியர் தெரிவுக்கான நேர்முகப்பரீட்சை நடைபெற்றபொழுது இவர்கள் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த விடயம் தொடர்பாக இதுவரை தமக்குச் சாதகமான பதில் கிடைக்காமையால் இந்த மறியல் போராட்டத்தை மேற்கொள்வதாக அவர்கள் தெரிவித்தனர்.

(இ-73-10)

## யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் நாளைமுதல் விரிவுரைக்குச் செல்வர்

யாழ்ப்பாணம்,ஏப்.16

யாழ்.பல்கலைக்கழகத்தின் சகல பீடங்களையும் சேர்ந்த மாணவர்களை நாளைமுதல் விரிவுரைகளுக்குச் சமுகமளிக்குமாறு யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக மாணவர் ஒன்றியத்தால் வெளியிடப்பட்ட பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நாம் நடத்திய அஹிம்சைப் போராட்டங்களுக்கு உரிய பலன் கிடைத்துள்ளதால் மாணவர்களை விரிவுரைகளுக்குச் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

பளைப் பிரதேச செயலர் பிரிவில் எஞ்சியுள்ள மக்களை விரும்பிய இடங்களுக்கு இடம்பெயரச் செய்யவேண்டிய நடவடிக்கைகளை உரிய தரப்பினருடன் எமது மாணவர் ஒன்றியம் தொடர்ந்தும் மேற்கொள்ளும் என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இப்படி அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-5)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

உ
ஓம் முருகா

## வட்டுக்கோட்டை மாவடி அருள்மிகு அடைக்கலந்தோட்டம் கந்தசுவாமியார் கோயில்

### 8 ஆம் திருவிழா சப்பறம்

16-04-2000 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் விசேட அபிஷேகம் பூஜைகள் நடைபெறும்.
மாலை 4.30 மணி தொடக்கம் 5.30 மணி வரை

**சொற்பொழிவு**

பெரியபுராணம் தொடர் விரிவுரை
நிகழ்த்துபவர்:
திரு.இரா.செல்வவடிவேல் ஆசிரியர் அவர்கள்.

**விசேட மேளக்கச்சேரி**

*எஸ்.ஜெயராமன் குழுவினர்.*

(C/11849) - *8 ஆம் திருவிழா உபயகாரர்.*

---

## தொல்புரம் கொட்டடியம்பதி அருள்மிகு ஸ்ரீ ஆதிமுத்துமாரி அம்மன் தேவஸ்தானத்தில்

13.04.2000 புதுவருட தினத்தன்று அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட சீட்டு விவரம்

1) 797 2) 39 3) 333

(75435) *பரிபாலன சபை.*

---


## BRIGHTMAN

**கல்வி நிலையம்**

(நீராவியடி பிள்ளையார் கோயில் முன்பாக)
பிறவுண் றோட், யாழ்ப்பாணம்.

**O/L DAY CLASS**

(முழுப் பகல்நேர வகுப்புக்கள்)
எமது திறமை மிக்க ஆசிரியர் குழுவினால்.
ஆரம்பம்: 19-04-2000 புதன் காலை 8 மணி

(75441)


---

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி இன்ரறக்ட் கழகம்

*சகல அங்கத்தவர்களுக்கும்*

மேற்படி கழகத்தின் அவசர கலந்துரையாடல் இன்று (16-04-2000) ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு பாடசாலையில் இடம்பெறும்.
வருகை அவசியமானது.

(75428) - செயலாளர்.

---

சுன்னாகம் மேற்கு
அறிஞர் ஐயன்னா சனசமூக நிலையத்தின
அறிஞர் ஐயன்னா விளையாட்டுக் கழகத்தினால்
நடத்தப்பட்ட

### அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

| | | |
|---|---|---|
| முதலாம் பரிசு | 1387 | (பெற்றுக்கொள்ளப்பட்டது) |
| இரண்டாம் பரிசு | 1106 | (பெற்றுக்கொள்ளப்பட்டது) |
| மூன்றாம் பரிசு | 2121 | |

ஆறுதல் பரிசுகள்
1353, 0479, 0007, 0263, 2581, 0264

மேற்படி பரிசுகளை 01-05-2000க்கு முன்னதாகவே பெற்றுக்கொள்ளவும்.

(75428) - நிர்வாகத்தினர்

---


## BITSMANS

**INSTITUTES MANIPAY**

பிரிவு 1 **O/L DAY CLASS**

எமது வழமையான "SUPER GRADE" ஆசிரிய குழுவினால் கற்பிக்கப்படுகின்றது.
ஆரம்பம்: 19-04-2000 புதன் காலை 8.00

குறிப்பு:- *"எமது கல்வி நிறுவனத்தின் தரத்திற்கு கடந்தகால பெறுபேறுகள் சான்றாகும்"*

(விண்ணப்பங்களை முன்கூட்டியே பதிவு செய்யவும்)

C/11852


---

## கைதான இளைஞன் பலாலியில் தடுத்துவைப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.16

ஓட்டுமடம், வண்ணார்பண்ணைப் பகுதியைச் சேர்ந்த ஞானசோதி கமலதாஸ் என்ற இளைஞன் படையினரால் கைது செய்யப்பட்டு தற்போது பலாலி இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்று யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

---


**A/L 2002**

**C.MATHS**

வேகநேர வரைபு
Mon, Fri, 6.15 a.m
திரிகோணகணிதம்
Tue, Thu, 6.15 a.m
Mr.*தவசேகர்* B.Sc.
(புதிய மாணவர்களுக்கு ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும்)

**SHAMROCK**

(C/11855)


---


**கிறிஸ்ரல் சென்ரர்**

நெல்லியடி
2000 A/L DAY
PAPER CLASS
* வணிகக்கல்வி
By:- முகுந்தன்
இந்து நாகரிகம்
By:- பத்மராஜா
(யாழ்)

(75407)


---


மில்லேனியம்
புதுவருடத்துக்கான
**மலிவு விற்பனை**

## நியூ விமாசி

மாபிள் வகைகள்
*4x4 சுவர்மாபிள்*
*(White,Color)*
*6x6 சுவர் மாபிள்*
*(White,Color)*
*8x8 நிலமாபிள்*
*12x8 நிலமாபிள்*
*1x1 நிலமாபிள்*
என்பன பெற்றுக்கொள்ளலாம்.
*27/3 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.* (75243)


---


## ராஜா

யாழ்ப்பாணம்
*அஜித். ஷாலினி*
நடிப்பில்

### அமர்க்களம்

காட்சிகள்
10.30,2.00,5.00
(C/11604)


---


## நாகம்ஸ்

சுன்னாகம்
ரஜனி, சௌந்தர்யா, ரம்பா, செந்தில்
நடிப்பில்

### அருணாச்சலம்

காட்சிகள்
11.00, 2.30
(புதிய நேரம்)

(C/11760)


---


**லிபேட்டி**

அச்சுவேலி
இன்று
ரஜனிகாந்த், கௌதமி, சரண்ராஜ்
நடிப்பில்

### தர்மதுரை

காட்சிகள் 10.30, 2.30
T.P- 070-212223
- 070 - 212678
FAX No. 0094 - 70212223

(75258)


---

# தற்கொலையாளியின் குடும்ப உறுப்பினர்கள் மீது வழக்கு?

## அரசு ஆலோசிப்பதாக தெரிவிப்பு

கொழும்பு,ஏப்ரல்.16

கொழும்பு நகர மண்டப வளாகத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்புக்குப் பொறுப்பான தற்கொலைப் படையாளியின் குடும்ப அங்கத்தவர்களுக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்படும் என்று அரசு அறிவித்துள்ளது.

இவரின் தாயார், சகோதரி, இரு சகோதரர்கள், ஆகியோரைக் குற்றப் புலனாய்வுப் பொலீஸார் மட்டக்களப்பில் கைதுசெய்தனர். பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு உதவிய வகையில் இவர்களுக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யும் சாத்தியங்கள் பற்றிச் சட்டமா அதிபர் திணைக்களம் ஆராய்ந்து வருவதாகவும் -

இவர்களது வாக்குமூலங்கள் தீவிரமாக ஆராயப்பட்டு வருவதாகவும் -

சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். குடும்ப அங்கத்தவர்கள் நால்வரும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் காலவரையறையின்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

(ஐ-4)

---

## மாட்டுவண்டி சவாரிப் போட்டி

**புத்தூர் கிழக்கு**
மகாத்மா காந்தி சனசமூகநிலைய வளர்ச்சிக்கான
மாபெரும் மாட்டுவண்டிச சவாரிப் போட்டி

காலம்:- 23-04-2000 ஞாயிற்றுக்கிழமை
பிற்பகல் 1.00 மணியளவில்
இடம்:- விக்கினேஸ்வரா சவாரித்திடல்
(புத்தூர் கிழக்கு)
அன்பளிப்பு:- 10/-
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(75396) - நிர்வாகிகள்

---

## இதய அஞ்சலி



### அமரர் வைத்திலிங்கம் பொன்னையா

(இளைப்பாறிய அதிபர்,
பன்னாலை சேர் கனகசபை வித்தியாசாலை)

பன்னாலை கணேச சனசமூக நிலையத்தின் செயலாளராகவும் எண் பரிசோதகராகவும், போசகராகவும் நிலையத்தால் நடத்தப்பட்டுவந்த சமாதான சபை உறுப்பினராகவும் பல்வேறு சந்தர்ப்பங்களில் அரும் பணிபுரிந்து எமது நிலையத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்த வைத்திலிங்கம் பொன்னையா அவர்கள் 13.04.2000 அன்று லண்டன் நகரில் இறைபதம் எய்திய செய்தியறிந்து ஆழ்ந்த கவலை அடைகின்றோம்.

அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

- நிர்வாக சபையினர்

கணேச சனசமூக நிலையம்,
பன்னாலை, தெல்லிப்பழை.

(75447)

---

## கண்ணீர் அஞ்சலி

எமது அங்கத்துவ சங்கமான
சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கத்தின் தலைவர்

**திரு.செ.சுப்பிரமணியம் அவர்களின்**
அன்பு மகள்

### சுப்பிரமணியம் கீதா

அவர்களின் திடீர் மறைவால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*தலைவர்,*
*பணிப்பாளர்கள், பணியாளர்கள்,*
*யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்.*

111,பிரதான வீதி,
யாழ்ப்பாணம். (C/11856)

---

## கண்ணீர் அஞ்சலி

புங்குடுதீவு - நயினாதீவு பல நோ.கூ.சங்கத்தின் தலைவர்

**திரு.க.இராஜரட்ணம்** அவர்களின்
அன்பு மாமனார்

### பஸ்தியன் றோமபாலா

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
அங்கத்தவர்கள்,
(C/11860) புங்குடுதீவு - நயினாதீவு ப.நோ.கூ.சங்கம்.

# பிரேத அறைக்குப் புதிய குளிரூட்டி பொருத்தும் வேலை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 16

யாழ். போதனா வைத்திய சாலையின் பிரேத அறைக்கென கொண்டுவரப்பட்ட புதிய குளிரூட்டிகளைப் பொருத்தும் பணி ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது.

கடந்த இரு மாதங்களுக்கு முன் இங்கு எடுத்துவரப்பட்டிருந்த இந்தக் குளிரூட்டிகள் அவற்றைப் பொருத்துவதற்கான பொறியியலாளர்கள் கொழும்பில் இருந்து வர வேண்டி இருந்ததால் ஆஸ்பத்திரியில் முடங்கிக் கிடந்தன.

தற்போதைய சூழ்நிலையில் கொழும்பில் இருந்து பொறியியலாளர்கள் இங்கு வரமுடியாதிருப்பதால் அவர்களின் ஆலோசனைப்படி இங்குள்ள பொறியியலாளர்களே இந்தக் குளிரூட்டிகளைப் பொருத்தவுள்ளனர்.

தற்போது பொருத்தப்பட்டுவரும் இந்த இரு குளிரூட்டிகளும் தலா ஆறு சடலங்கள் வீதம் 12 சடலங்களைப் பாதுகாக்கக் கூடிய அறைகளைக்கொண்டவை. எனவே ஒரே நேரத்தில் 12 சடலங்களைப் பழுதடையாமல் பாதுகாக்க முடியும்.

(ஐ-15)

## மந்திகை ஆஸ்பத்திரியில் பொது வைத்திய சிகிச்சைப் பிரிவு
## இவ்வாரம் முதல் ஆரம்பம்

வடமராட்சி, ஏப்ரல் 16

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் சுமார் 15 வருடகால இடைவெளிக்குப் பின்னர் இவ்வாரம் முதல் பொது வைத்திய சிகிச்சைப் பிரிவு ஆரம்பமாகவுள்ளது.

இவ் வைத்தியப் பிரிவுக்கென வைத்திய நிபுணர் ஒருவர் இன்மையால் கடந்த 15 வருடகாலமாக இச் சிகிச்சைப் பிரிவு செயற்படாதிருந்தது.

குடாநாட்டில் யாழ். போதனா வைத்தியசாலை, மந்திகை அரசினர் வைத்தியசாலை ஆகியவற்றில் சத்திர சிகிச்சைகளை மேற்கொள்ளும் பிரெஞ்சு வைத்தியக் குழுவினர் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் முதன் முதலாகப் பொது வைத்திய சிகிச்சையை அளிக்க முன்வந்துள்ளனர்.

இச் சிகிச்சையை அளிப்பதற்கெனப் பிரெஞ்சு வைத்தியக் குழுவின் பொதுவைத்திய நிபுணர் ஒருவரும் தாதி ஒருவரும் மந்திகை வந்து சேர்ந்துள்ளனர்.

இவ் வைத்தியக் குழுவினர் பிரதி வியாழக்கிழமைகளில் பொது வைத்திய சிகிச்சையையும் சனிக்கிழமைகளில் சலரோக சிகிச்சையினையும் மேற்கொள்வார்கள்.

(ஐ-173)

## பதிவு செய்யக் கோரிக்கை

நெல்லியடி, ஏப்ரல் 16

வடமராட்சி கிழக்கிலிருந்து அனர்த்தங்களினால் இடம்பெயர்ந்து வடமராட்சிப் பகுதியில் ஆலயங்களிலும் உறவினர், நண்பர்கள், வீடுகளிலும் வசிக்கும் இடம்பெயர்ந்த மக்கள் தமது குடும்ப விவரங்களை அவ்வப் பகுதி கிராம சேவை அலுவலர்களிடம் உடனடியாகப் பதிவு செய்ய வேண்டுமென பருத்தித்துறை 524 பிரிகேட் படைப் பிரிவு பணிப்புரை விடுத்துள்ளது.

மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவின் கீழ் உள்ள கிராம சேவை அலுவலர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று பருத்தித்துறை பிரிகேட் அலுவலகத்தில் நடைபெற்றபோது, லெப்டினன்ட் ஜயமானே, இப்பணிப்புரையை விடுத்தார்.

இதைத்தொடர்ந்து பதிவு செய்யும் பணி நேற்று ஆரம்பமானது. இன்றும் அந்தப் பணி தொடரும்.

(ஐ - 109)

## இலவச சிகிச்சை முகாம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 16

உரும்பிராய் லயன்ஸ் கழகம் நடத்தும் இலவச மருத்துவ முகாம் ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் நண்பகல் 12 மணி வரை அச்செழு போயிட்டி விநோபாஜி சனசமூக நிலையத்தில் இடம்பெறும்.

இந்த முகாமில் கண் பரிசோதனையை எஸ். எம். பெர்னாண்டோ நிறுவனத்தினரும் —

நீரிழிவுப் பரிசோதனை, இரத்த அழுத்தப் பரிசோதனை என்பனவற்றை பிரபல வைத்திய நிபுணர்களும் மருத்துவபீட மாணவர்களும் இணைந்தும் மேற்கொள்வர்.

இம் முகாமில் இலவசமாகக் கண்ணாடி பெறுபவர்கள் வறுமைக் கோட்டுக்கு உட்பட்டவர்கள் என்பதை அத்தாட்சிப் படுத்தும் கிராம அலுவலரின் சான்றிதழைச் சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

(க)

## அதிபர் பதவிஉயர்வு நேர்முகப்பரீட்சை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 16

அதிபர் தரங்களில் உள்ளவர்களை தரம் உயர்த்துவதற்கான நேர்முகப்பரீட்சை நாளை திங்கட்கிழமைமுதல் இரு தினங்களுக்கு யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நேர்முகப்பரீட்சையை நடத்துவதற்கென கல்வி, உயர்கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் எஸ். தில்லைநடராஜா இன்று யாழ்ப்பாணம் வருகின்றார்.

(ஐ - 7)

## பிரசவத் தாய்மார்களுக்கான ஊசி மருந்து தட்டுப்பாடு

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் பிரசவத் தாய்மார்களுக்குத் தேவையான 'ஏகமற்றின்' ஊசி மருந்து இன்மையால் பிரசவத்தாய்மார் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பிரசவத்தின் போது ஏற்படும் இரத்தப் பெருக்கை கட்டுப்படுத்த இந்த ஊசி மருந்து பிரசவத்தாய்மார்களுக்கு ஏற்றப்பட வேண்டும். ஆனால் இம்மருந்து இன்மையால் இரத்தப் பெருக்கு அதிகரித்து பிரசவத் தாய்மார்கள் மரணத்தைக்கூட எதிர்நோக்க வேண்டியுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த ஊசி மருந்து தனியார் கடைகளில் கூட தற்போது பெற முடியாதுள்ளது.

(ஐ-173)


## வாழ்த்துகின்றோம்

அச்செழு நெற்குப் பகுதிக்கு மின்சாரம் வழங்கப்பட்டதையிட்டு வட பிராந்திய பொது முகாமையாளர், யாழ். உதவிப்பிரதம பொறியியலாளர்கள், சுன்னாகம் உதவி பிரதம பொறியியலாளர்கள், மற்றும் சக ஊழியர்கள் எங்கள் பகுதி மின் முகாமி ஆகியோரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அச்செழு வாழ் மக்கள்.

(75440)



உ

## சைவத் தமிழ்நிதி கௌரவ விருது

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய மஹோற்சவ காலத் தொடர்சொற்பொழிவைச் சிறப்பாக நிகழ்த்திய எமது ஆலய பிரதமகுரு

**சிவஸ்ரீ பாலசர்வேஸ்வரக் குருக்கள்**

B. A. [Hons] (வசந்தன் ஐயா)

அரியாலை அவர்களுக்கு

'சைவத்தமிழ்நிதி' என்னும்

விருது வழங்கிக் கௌரவித்த

மருதடி விநாயகர் தர்மகர்த்தா சபையினருக்கு

எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கிறோம்.

வாழ்க சைவம்! வாழ்க தமிழ்!

பரிபாலன சபை

ஞானசெல்வ விநாயகர் ஆலயம்

கொய்யாத் தோட்டம்,

சுண்டுக்குளி.

[75437]



## ஐடியல் கல்வி நிறுவனம்

மானிப்பாய்


எமது நிறுவனத்தில் தொடர்ந்து கல்விகற்று கடந்த O/L பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுத்தந்த மாணவர்களையும், சித்தியெய்திய ஏனைய மாணவர்களையும் வாழ்த்துகின்றோம்.

| | |
|---|---|
| 1. செ. சிவானி | - 10D |
| 2. ச. ஷங்கர் | - 8D 2C |
| 3. ச. துர்ஷிகா | - 6D, 4C |
| 4. செ. அர்ஜுனா | - 6D, 4C |
| 5. இ. ஐங்கரன் | - 6D, 3C, S |
| 6. ச. கஜேஷிகா | - 5D, 3C, S |
| 7. சுரேக்கா | - 4D, 5C, S |

நிர்வாகி, ஆசிரியர்கள்

(75430)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு 17 — 12 — 1952

உதிர்வு 15 — 03 — 2000

## அமரர் நடராஜா ஸ்ரீசோமசேகரம்
(இலங்கை வங்கி உத்தியோகத்தர்)

எங்கள் அன்புத் திருவுருவின் மறைவின் போது நேரில் கலந்தும் கடித மூலமாகவும் அனுதாபம் தெரிவித்த அன்புள்ளங்களுக்கும் இறுதிச் சடங்கில் கலந்து பல வழிகளிலும் உதவிய அனைவருக்கும் எங்கள் இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இன்று (16-04-2000) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திருமதி ச. ஸ்ரீசோமசேகரம்

பிள்ளைகள்: துஷ்யந்தா, வஜைரா

625, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(வி/11843)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி

## செல்லையா தங்கம்மா

பிறப்பு 1929-01-05

இறப்பு 2000-03-17

தாலாட்ட ஒரு பாட்டு — எம்மை
பாராட்ட ஒரு பாட்டு
ஆனந்தப் பெருவெள்ளம் தந்த
அமைதியை யாரிடம் கேட்போம்.
உன்னைப் போல உறுதுணையாக
ஊரும் உலகமும் வருமா?
ஆரார் வந்தென்ன?
ஆரார் இருந்தென்ன?
அம்மையே! இனி
ஆனந்தப் பெரும் பேறு — எம்மை
அணைத்திடும் நாள் எந்நாளோ?

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

அன்னுங்கை,
உரும்பிராய் மேற்கு.

(75433)

# கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு வரும் மலேரியா நோயாளர்கள் அதிகரிப்பு

வவுனியா, ஏப்ரல் 16

கிளிநொச்சி மருத்துவ மனையில் கடந்த மாதம் மலேரியா, இரத்தச்சோகை மற்றும் பிறநோய்களால் பாதிக்கப்பட்டோரில் 11 பேர் இறந்துள்ளனர்.

இவர்களில் இருவர் மலேரியா நோயினாலும் இருவர் இரத்தச்சோகை நோயினாலும் பாதிக்கப்பட்டவர்கள் ஆவர்.

இதேவேளை —

கடந்த மாதம் கிளிநொச்சி மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற 22ஆயிரத்து785பேரில் 3ஆயிரத்து 728பேர்மலேரியா நோயினாலும் 3 ஆயிரத்து 538 பேர் சாதாரண காய்ச்சலினாலும் பாதிக்கப்பட்டிருந்ததாக புள்ளிவிவரங்கள் மூலம் தெரிய வருகிறது.

மருத்துவமனையில் தங்கிச் சிகிச்சைபெறும் பெரும்பாலானோர் மலேரியா நோயால் பீடிக்கப்பட்டுள்ளார்கள். ஏழு பேர் காசநோயால் பாதிக்கப் பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மருத்துவ மனையில் மருந்துத்தட்டுப் பாடு நிலவி வருகிறது. இதனால் வெளிநோயாளர்களும் மருந்து பெறமுடியாத நிலை காணப்படுவதாக வன்னிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

(ஐ-8-9)


## BRIGHTன் புதிய வெளியீடுகள்

தரம் 2 கணிதம், மொழிவிருத்தி
தரம் 6, 7, 9 English Work Book
தரம் 7, 9 சமூகக்கல்வி
தரம் 6, 7, 9 சுகாதாரமும் உடற்கல்வியும்

யாழ். பிரபல புத்தகசாலைகளில்
விற்பனையாகின்றன.

(75240)


## 30 ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 15 | 18 |
| 03 | 03 |
| 1928 | 2000 |

திருமதி

### நடராசா அன்னம்மா

இன்று [16—04—2000] ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்தி கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்
மருமகன் குடும்பத்தினர்.

அன்னராசா வாசம்,
நெட்டிலிப்பாய்,
கோண்டாவில்.

(75231)

## நீங்காத நினைவலைகள் நான்கு ஆண்டுகள்



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 1927 | 1996 |
| 07 | 04 |
| 08 | 16 |

### Dr. நாகலிங்கம் இராஜநாதன்

திதி: - சதுர்த்தசி 16 - 04 - 2000

உங்கள் குடும்பத்தின் அனைவரும் எங்கள் கடைசி மூச்சு உள்ளவரை தங்கள் ஆத்மா சாந்தியடைய இன்றுபோல் என்றும் இறைவனைப் பிரார்த்தித்து நிற்கின்றோம்.

உங்கள் பிரிவைத் தாங்காது
நித்தம் ததும்பும்
சகோதரர்கள், சகோதரிகள்.

'பூம்பந்தல்',
மானிப்பாய் வடக்கு.

(75353)

## நடுக்கட்டு உத்தியோகத்தர் நியமனம்

சங்கானை, ஏப்ரல் 16

வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட சங்கானை, வட்டுக்கோட்டை உப அலுவலகப் பிரிவில் 1999 ஆம் ஆண்டு வரையான சோலை வரி நிலுவைகளை அறவிடுவதற்கு நடுக்கட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த பல வருடங்களாக அறவிடப்படாமல் இருந்த நிலுவைகளை இவர்கள் மூலம் இப் பிரிவு மக்களிடம் இருந்து அறவிடுவதற்கான முயற்சிகளை வலி.மேற்கு பிரதேச சபையினர் எடுத்துள்ளனர்.

(க - 29)

## தென்னைகள் தறிப்பு

தென்மராட்சி, ஏப்ரல் 16

இத்தாவில், வேம்பொடு கேணி, முகமாலை ஆகிய பகுதிகளில் நூற்றுக்கணக்கான தென்னை மரங்கள் தறிக்கப்படுவதாக அங்கு சென்று திரும்பியவர்கள் தெரிவித்தனர்.

தறிக்கப்படும் மரங்கள் இயந்திரத்தினால் துண்டாக்கப்பட்டு வாகனங்களில் ஏற்றிச் செல்லப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-117)

## சண்டிலிப்பாய்ப் பகுதிகளில் 725 விதவைகள்

சண்டிலிப்பாய், ஏப்ரல் 16

சண்டிலிப்பாய், பிரதேச செயலகப் பிரிவில் கடந்த காலப் போர் அனர்த்தங்கள் காரணமாக தங்கள் கணவரை இழந்த விதவைகளின் எண்ணிக்கை 725 என்று அண்மையில் மேற்கொள்ளப் பட்ட மதிப்பீடு ஒன்றின்மூலம் தெரியவந்துள்ளது.

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக சமூகசேவை உத்தியோகத்தர் அ. அமிர்தலிங்கம் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக விதவைகள் பற்றிய ஆய்வினை மேற்கொண்டிருந்தார்.

(இ-135)


## விற்பனைக்கு

எமது சங்கத்தில் 46 புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு. தேவைப்படுவோர் உடன் தொடர்பு கொண்டு விலைவிவரத்தை 21-04-2000ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்கவும். மேலும் 37 விறாத்து சேவல் குஞ்சுகளும் விற்பனைக்குண்டு.

பொதுமுகாமையாளர்,
யாழ். மாவட்ட
அபிவிருத்திக்
கூட்டுறவுச்சங்கம்,
திருநெல்வேலி
கிழக்கு, கோப்பாய்.
[சி/11836]


# மட்டு நகர் சந்திவெளியில் மூன்று இளைஞர்கள் கைது

மட்டக்களப்பு,ஏப்ரல் 16

மட்டக்களப்பு சந்திவெளியைச் சேர்ந்த மூன்று இளைஞர்கள் நாசகார ஒழிப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு தேசிய மனித உரிமைக் குழுவில் முறையிடப்பட்டுள்ளது.

நற்குணம் சுதாகரன் (வயது 16) என்ற இளைஞன் கடந்த 7 ஆம் திகதி கைது செய்யப்பட்டதாகவும் அவர் வழங்கிய தகவலைத் தொடர்ந்து மாணிக்கவாசகம் நவீந்திரன் (வயது 21), இராஜசிங்கம் தெய்வேந்திரன் (வயது 21) ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டதாவும் தெரிவிக்கப்பட்டது.

(9)

## தொலைக்கல்வி ஆசிரியருக்கான செயலமர்வு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 16

யாழ். இந்துக்கல்லூரியைச் சேர்ந்த தொலைக்கல்வி ஆசிரியருக்கான தொடர்புறு செயலமர்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் மேற்படி கல்லூரியில் நடைபெறும்.

இந்த செயலமர்வில் சகல பயிற்சி ஆசிரியர்களையும் போதனாசிரியர்களையும் சமுகமளிக்குமாறு சிரேஷ்ட போதனாசிரியர் ச. சரவணமுத்து கேட்டுள்ளார். [க]

## புராணப்படிப்பு

கொழும்புத்துறை, ஏப்ரல 16

சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் கடந்த மாதம் 20 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் தினசரி காலை 7.20 மணி தொடக்கம் மாலை 4.40மணிவரை வ. ஆறுமுகம் தலைமையில் கந்தபுராணப் படிப்பும், பயன் சொல்லலும் நடைபெற்றுவருகின்றது.

ஸ்கந்தஷஷ்டி விரதம்இறுதி நாளான எதிர்வரும் நவம்பர் மாதம் 2 ஆம் திகதி வியாழக் கிழமை இப்புராணப்படிப்பு முடிவுறும் என ஆச்சிரமத்தின் தலைவர் சி. நாகலிங்கம் தெரிவித்துள்ளார்.

(ஐ-30)

## வீடு பார்க்கச் சென்ற பெண்கள் திரும்பினர்

தென்மராட்சி, ஏப்ரல்16

பளை, வேம்பொடுகேணியில் உள்ள தமது வீடுகளைப் பார்க்கச் சென்ற வேளையில் காணாமற் போனதாகக் கூறப்பட்ட இரண்டு பெண்களும் கடந்த 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மிருசுவில் மன்னன் குறிச்சியில் உள்ள உறவினர்வீடுகளுக்குத்திரும்பியுள்ளனர் என்று தெரிவிக்கப் பட்டது.

இடம்பெயர்ந்து ஒட்டுவெளி அமெரிக்கன்மிஷன் பாடசாலையில் தங்கியிருந்த நடேசு பூரணம் (வயது 40), சின்னராசா பூரணம் (வயது 30) ஆகிய இருவரும் தமது வீடுகளைப் பார்ப்பதற்காகச் சென்றனர் எனவும் அதன் பின் அவர்கள் குறித்த தகவல் ஏதும் இல்லை என்றும் அவர்களது உறவினர்களால் முன்பு தெரிவிக்கப்பட்டது தெரிந்ததே.

(ஐ-117)

## செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனம்

செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனம்
REHABILITATION ORGANISATION OF THE DEAF

### பழைய உறுப்பினர்களை உறுதிப்படுத்துதலும் புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பதறகுமான அறிவித்தல்

வடக்கு — கிழக்கில் உள்ள செவிப்புலன் வலுவற்றோர் நலன்களைக் கவனிக்கும் இவ்வமைப்பானது அவர்களின் உரிமைகள், வேலைவாய்ப்பு, கல்விப்பயிற்சிகள், தொழிற்பயிற்சிகள், புனர்வாழ்வு அபிவிருத்தி போன்ற விரிவான இணைப்புக்களையும் சேர்த்து மேம்படுத்துவதில் ஈடுபட்டுள்ள ஒரு நிறுவனமாகும்.

மேற்படி வலுவுற்றோரான எமது நிறுவனத்தின் பழைய உறுப்பினர்கள் படிவங்களைக் காரியாலயத்தில் பெற்றுப் பூர்த்திசெய்து சந்தாப்பணத்தினைச் செலுத்தி உறுப்புரிமையை உறுதிப்படுத்துமாறு தயவுடன் வேண்டப்பெறுகின்றனர்.

இந்நிறுவனத்துடன் இதுவரை இணையாத 17 வயதிற்கு மேற்பட்ட செவிப்புலன் வலுவற்றோர் அனைவரையும் புதிய உறுப்பினர்களாகத் தவறாது இணையுமாறு தயவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

★ பெற்றோர்/பாதுகாவலர் நண்பர்கள்கவனத்திற்கு:
உங்கள் பிள்ளைகள், உறவினர், நண்பர்கள் பேசமுடியாது கேட்கும் சக்தி அற்றவர்களாக இருந்தால் உடன் எமது நிறுவனத்தில் உறுப்பினராக்கி அவர்களின் நல்வாழ்விற்கு வழிகாட்டி உதவுங்கள்.

காரியாலயத்தில் சந்திக்கும் நேரம்:
ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10.00 மணி தொடக்கம் பிற்பகல் 2.00 மணி வரை

+அச்சத்தை அகற்றுவோம் அயர்வின்றி உழைப்போம்+

இங்ஙனம்,
நிர்வாக சபையின் சார்பில்
தங்கள் உண்மையுள்ள

சே. செல்வகுமார்
தலைவர்.

தி. ஜெகநாதன்
செயலாளர்.

செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனம்
''தில்லை மண்டபம்'',
426, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(75418)

# உதயன்

## முன்னேற்றம் காண

இந்தப் புதுவருடத்தில் எம்முன்னுள்ள பிரதானமான பணி, இரண்டு தசாப்தங்களுக்கு மேலாகத் தொடரும். கோர யுத்தத்துக்கும் பயங்கரவாதத்துக்கும் முற்றுப்புள்ளி வைப்பதே ஆகும். இதற்காக எம்மிடையே உள்ள முரண்பாடுகளைக் களைந்து நிரந்தரத் தீர்வைக் காண்பது தான் ஒரே இலட்சியமாகும்—

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தமிழ் — சிங்கள புத்தாண்டு தினத்தை ஒட்டி வெளியிட்ட செய்தியில் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

போருக்கு மூலகாரணமாக அமைந்தது, அமைவது இனப்பிரச்சினை. போர் கடந்த சுமார் இருபது வருடங்களாக தீவிரமாக நடைபெற்று வருகிறது. அதற்கு மூலகாரணமாக உள்ள இனப்பிரச்சினை நாற்பத்தைந்து வருடங்களுக்கு மேலாக வேரூன்றி உள்ளது.

இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு உகந்ததல்ல, சாத்தியமல்ல என்பது அனேகமாக எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றே. எனினும் போர் மூளுவதற்கும் தொடர்வதற்கும் இடமளிக்கப்பட்டு விட்டது; இடமளிக்கப்படுகிறது.

போரின் தாக்கத்தைத் தென்னிலங்கை மக்கள் இப்போது தான், மெல்ல மெல்ல உணரத் தொடங்குகிறார்கள். எனினும் பௌத்த பிக்குமாரும், சிங்களக் கடுங் கோட்பாளர்களும் போர் தொடர வேண்டும் என்று கேட்பது தெற்கில் முரண்பட்ட நிலையைத் தோற்றுவித்துள்ளது.

ஆளுங்கட்சியும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு ஒத்துழைக்க முன்வந்துள்ளமை அண்மைக்கால வரலாற்றில் புதிய திருப்பமே; நாட்டு மக்களில் பெரும்பாலானோர் வரவேற்கும் விடயமாகும். ஆயினும் இரு தரப்புகளும் ஒரே அணியாகச் செயற்படுவதற்கான அறிகுறி இன்னும் தென்படவில்லை. முரண்பாடுகள் கருத்திணக்கமின்மை என்பன நிறையவும் உண்டு.

ஆகையால் தெற்கில் நிலவும் முரண்பாடுகளை நீக்குவதற்கு முதலில் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவது அவசியம். நிரந்தரத் தீர்வைக் காண்பதற்கு இது முதற் தேவையாகும். அதன் பொருட்டு எத்தனை காலம் செல்லும் என்பதனை சொல்ல முடியவில்லை.

போருக்கு முடிவு காண வேண்டும், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் அனைத்து மக்களும் ஒத்துழைப்பு நல்குவது அவசியம் என்று ஜனாதிபதி கூறுவது மிகவும் பொருத்தமானதே. அதனை எவ்வாறு உருவாக்க முடியும் என்பதில் தீவிர கவனம் செலுத்த வேண்டும்.

அர்த்தமுள்ள தீர்வு ஒன்றைக் காண்பதற்கு எல்லாத் தரப்புகளுக்கும் இடையில் கருத்திணக்கம் அவசியம் என்று சொல்வதால் மட்டும் அது நிறைவெய்தி விடாது. அதற்குரிய — உகந்த — உத்திகளுடனும் தந்திரோபாயங்களுடனும் செயற்படுவதன் மூலமே கருத்திணக்கம் காண்பது சாத்தியமாகும்.

பேச்சுவார்த்தை வெற்றி காண்பதற்கு மக்களது ஒத்துழைப்பும் ஆதரவும் எந்தளவுக்கு அவசியமோ, அதே அளவுக்கு அரசியல் தலைவர்களின் சிந்தனைகளிலும், செயற்பாடுகளிலும் மாற்றம் தேவை. தலைவர்கள் தாராளமாக நடந்து கொண்டு முன் மாதிரி காட்டினால் அன்றி, வாக்கு வங்கியை மறந்து நாட்டு நலனில் அக்கறை கொண்டால் அன்றி, இது விடயத்தில் முன்னேற்றம் காண்பது ஆமை ஊர்வது போலாகும்.

# இறைமகனை மக்கள் வரவேற்ற குருத்தோலை ஞாயிறு இன்றாகும்

எளிமையையும் தாழ்ச்சியையும் எம் அணிகலனாகக் கொண்டால் மகிமையும் அமைதியும் விரைவாய் அருள்வார் இறைவன்.

### குருத்து ஞாயிறு

உலகெங்கும் பரந்து வாழும் கிறிஸ்தவர்கள் அனைவரும் குருத்தோலை ஞாயிறு தினத்தை (Palm Sunday) அனுஷ்டிக்கிறார்கள். யேசுக்கிறிஸ்து தனது பகிரங்கப் பணிவாழ்வின் இறுதி நாள்களில் ஜெருசலேம் நகருக்கு வந்தபோது மக்களால் வரவேற்கப்பட்டதை நினைவுபடுத்துகிறது இந்தக் குருத்து ஞாயிறு.

பக்தி எழுச்சியும், அமைதியும் நிறைந்த நெஞ்சங்களுடன் புதிதாய் விரிந்த இளங் குருத்துக்களைக் கைகளில் தாங்கி ''ஓசான்னா தாவீதின் குமாரா ஓசான்னா'' என்று வாழ்த்தி கிறிஸ்து அரசர் உலகின் ஒரே இரட்சகர் என்று விசுவசித்து இந்த மாபெரும் யூபிலி ஆண்டிலே விசேடவிதமாக அவரை எமது உள்ளங்களில் வரவேற்பது சாலவும் பொருத்தமானதாகும்.

யேசு ஜெருசலேம் நகருக்கு வருகை தந்தது இது முதற் தடவையல்ல. குழந்தை யேசுவை ஜெருசலேம் தேவாலயத்தில் காணிக்கையாக ஒப்புக்கொடுத்தனர். மீண்டும் பன்னிரண்டாவது வயதில் வேதபாரகருடன் வாதிட்டு தனது ஞானத்தையும் அறிவையும் வெளிப்படுத்தினார். இவ்வாறு பல தடவைகள் வந்து சென்ற யேசுவை எவரும் கண்டு கொள்ளவுமில்லை, வரவேற்கவுமில்லை. ஏனெனில் மனுமகனின் நேரம் வரவில்லை என்பதால் அவர் தம்மை வெளிப்படுத்தவில்லை.

வாழ்வின் பல முனைகளிலும் அடிமைப்பட்டு, நசுக்கப்பட்டு வாழ்ந்த மக்கள் தமக்கு விடிவு வராதா? விடுதலை கிட்டாதா? என ஏங்கிக் கொண்டிருந்தார்கள். அவ்வேளை யேசுவின் போதனையின் சீரியபண்பையும், புதுமைகளையும் சட்டங்கள் மனிதனுக்காகவேயன்றி சட்டத்திற்காக மனிதன் அல்ல என்ற யேசுவின் மறுமலர்ச்சிப் போக்குமிகுந்த செயற்பாடுகளைக் கண்ணுற்ற மக்கள் இவர் தான் எமக்கு விடுதலை தரும் அரசர் என உலகியல் நோக்கில் அவரை எதிர்கொண்டு வரவேற்றனர். பின் அவர்களே பழி கூறி யேசுவைக் கொன்றனர். ஆனால் யேசுவின் பயணமோ ஆன்மீக ரீதியில் அமைந்திருந்தது.

**தவக்காலச் சிந்தனை**

'இதோ ஜெருசலேமை நோக்கிப் போகிறோம். மனுமகன் குறித்து இறைவாக்கினர் எழுதியுள்ளதெல்லாம் நிறைவேறும். புறவினத்தாரிடம் கையளிக்கப்பட்டு ஏளனத்திற்கும், அவமானத்திற்கும் உள்ளாகித் துன்பப்படுவார். அவர்கள் அவரைச் சாட்டையால் அடித்த பின் கொல்லுவார்கள். அவரோ மூன்றாம் நாள் உயிர்த்தெழுவார்'' [ லூக்: 18:31-33] என்று தமது பயணத்தின் குறிக்கோளைத் தெளிவுபடுத்துகிறார்.

மேலும் யேசு பயணித்ததோ கழுதைக் குட்டி மீது. அந்த நாள்களில் அழுக்குத் துணிகளையும், சுமைகளையும் சுமக்கும் அடிமட்டமான வேலைகளுக்கே கழுதை பயன்படுத்தப்பட்டது. இப்படியான தாழ்மையின் சின்னமான கழுதை மீது பவனி வந்து தாழ்ச்சியின் சிறப்பை வெளிப்படுத்தினார். அவ்வாறே செயலிலும் காட்டினார். இறைமகனாயிருந்தும் தன்னையே தாழ்த்தி அதுவும் சிலுவைச்சாவையே ஏற்கும் அளவிற்கு பணிந்து மீட்பின் காரணரானார்.

இவ்வாறு பாவிகளையும் ஏழைகளையும் ஒடுக்கப்பட்டோரையும் அமைதியற்றோரையும் மீட்க வந்த ஆன்மீக இராச்சியத்தின் அரசரான இயேசுவின் சமாதானத்தின் வழிகளை நீயும் இந்நாளில் அறிந்திருக்கவில்லையா? ஏனெனில் கடவுள் உன்னைத் தேடிவந்தகாலத்தை நீ அறியவில்லை என்று கூறுகிறார்.

ஆம்! எமது அன்றாட வாழ்வில் இயேசுவின் வடிவில் எம்மிடம் உதவிக்கரம் நீட்டி வந்த எத்தனை பேரைத் தட்டிக் கழித்திருக்கின்றோம்? இன்முகம் கொண்டு வரவேற்கத் தவறியுள்ளோம்? பல நிலைகளில் நான் உயர்ந்தவன் மற்றையோர் திறனற்றவர், அருகதை அற்றவர்கள் என்று ஒதுக்கெறிந்துள்ளோம். எமது பொதுச் செயற்பாடுகளில் இறைமகன் எனது மீட்பர் என்று அறிக்கையிட்டு எமது வாழ்வால் அன்றுபகரத் தவறியுள்ளோம். சிந்திப்போம்.

இன்று நாம் எமது கைகளில் ஏந்திய குருத்தோலைகள், எமக்கு கற்பிக்கும் பாடத்தை உணர்ந்து செயற்படுவோம். விண்ணை நோக்கி இக்குருத்து நிமிர்ந்து நிற்பது போல் எமது ஆன்மீகப் பாதையை விண்ணை நோக்கி நகர்த்துவோம். வெண்ணிறம் போன்று எமது உள்ளத்தைத் தூயதாக்குவோம். குருத்து காற்றில் அசைவது போல் உண்மைக்கும் நீதிக்கும் அமைதிக்கும் சிரம்தாழ்த்தி கல்வாரிப் பாதை தரும் பாடத்தைக் கைக்கொண்டு ஒழுகுவோம். எங்கும் எதிலும் எம்மைத் தாழ்த்துவோம். பணிபுரிவோம்; விண்ணக வாழ்வில் உயர்வடைவோம்.

**எஸ். யேசுதாஸ்**
கொழும்புத்துறை.

★

# திருமலை தாக்குதல் சூத்திரதாரிகளை இனங்காணமக்கள் முன்வரவேண்டும்

## டக்ளஸ் தேவானந்தா கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 16

திருகோணமலையில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலின் சூத்திரதாரிகளை இனங்காண பொதுமக்கள் முன்வர வேண்டும் என்று ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா கோரியுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே இப்படிக் கோரியுள்ளார்

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

புத்தாண்டை வரவேற்கும் முகமாக திருகோணமலையில் நடத்தப்பட்ட கலை நிகழ்ச்சியைக் குழப்பும் வகையில் மூர்க்கத்தனமாக மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தவர்களும் காயப்பட்டவர்களும் அடைந்துள்ள கவலை மற்றும் வேதனையை நாங்களும் பகிர்ந்து கொள்கின்றோம். இச்சம்பவத்தில் எண்மர் பலியானதுடன் நூற்றுக்கும் அதிகமானவர்கள் காயப்பட்டுள்ளனர் என்பதறிந்து மிகுந்த கவலை கொள்கின்றோம்.

இயல்பான சூழ்நிலையில் மக்கள் மகிழ்ச்சியாகவும் அமைதியாகவும் வாழ விரும்புவதைச் சகிக்க முடியாத சக்திகளின் கொடூரமான கோழைத்தனமான தாக்குதல்கள் எந்த வகையிலும் மக்களுக்கு நன்மை விளைவிப்பதாக இல்லை. இத்தகைய சம்பவங்கள் எங்கள் வரலாற்றில் இது தான் முதல் தடவையல்ல. காரைதீவு கலை நிகழ்ச்சியில் சிந்தப்பட்ட குருதியின் ஈரம் காய்வதற்கு முன்பாக மீண்டும் ஒரு தடவை மக்கள் இரத்தம் சிந்த நேரிட்டுள்ளமையானது கவலைக்கும் கண்டனத்துக்கும் உரியதாகும்.

மக்கள் மகிழ்ச்சியாக வாழ்வதைக் காணச் சகிக்காத சக்திகளின் குரூரத்தனமான இத்தகைய செயற்பாடுகளுக்கு துணிச்சலும் வீரமும் மிகுந்த ஊடுருவல் என்று முத்திரை குத்திப் பாராட்டுவது மக்கள் தொடர்ந்தும் நெருக்கடிகளுக்கு மத்தியில் வாழவே வழிவகுக்கும். எனவே பொதுமக்கள் இத்தகைய தாக்குதல்களின் சூத்திரதாரிகளை இனங்கண்டு இவை இடம்பெறாமல் தடுப்பதற்குரிய முன் முயற்சிகளை மேற்கொள்ள முன்வருவதன் மூலமே தங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியும் என்பதையும் உணர வேண்டும் — என்றுள்ளது.

(ஐ-3)

### கோப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவில்

## வீடு சேதமுற்ற 104 பேருக்கு இரண்டாம் கட்டக் கொடுப்பனவு

கோப்பாய்ப்பிரதேச செயலர் பிரிவில் வன்செயல் காரணமாக, வீடுகள் சேதமுற்றோருக்கான நஷ்டஈட்டுக் கொடுப்பனவான 25 ஆயிரம் ரூபாவின் இரண்டாம் கட்டக் கொடுப்பனவு 10 ஆயிரம் ரூபா 104 பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளது.

ஜே — 260 கிராமசேவையாளர் பிரிவில் 7 பேருக்கும். ஜே — 263 கிராமசேவையாளர் பிரிவில் 40 பேருக்கும், ஜே — 270 கிராம சேவையாளர் பிரிவில் 46 பேருக்கும், ஜே— 271 கிராம சேவையாளர் பிரிவில் ஒருவருக்கும், ஜே — 250 கிராம சேவையாளர் பிரிவில் 10 பேருக்கும் இக்கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

உரியவர்கள் கிராம சேவையாளர்களிடம் சென்று பெயர்களை உறுதிப்படுத்திய கடிதத்தினைப் பெற்றுக்கொண்டு வங்கிகளில் பணத்தினைப் பெறமுடியும். என பிரதேச செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-ரி-180)

**நாளை**

சித்திரை 5
திங்கட்கிழமை
திதி: சதுர்த்தசி
முன்னிரவு 11.30 வரை
நட்சத்திரம்: அத்தம்
பின்னிரவு 1.30 வரை
சுபநேரம்: 12 03 1 33
ராகுகாலம்: 7 33 9 03
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

**உதய வாக்கு**

அகிம்சையிலும் சத்தியத்திலும் தோல்வி என்பதே கிடையாது.

- காந்தியடிகள்

## கூட்டம்

பாடசாலையை விட்டு விலகிய மாணவர்களது கல்வி கற்றோர் தொழில் வாய்ப்பு நிறுவனத்தின் கூட்டம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை மேற்படி சங்கத்தின் பணிமனையில் நடைபெறும் என செயலாளர் செல்வி தவமதி தெரிவித்துள்ளார்.

(ஐ-103)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 16

தமிழ்மொழிமூல அரசினர் பாடசாலைகளுக்கு சங்கீத, நடன ஆசிரியர்களை ஆட்சேர்ப்பதற்கென கடந்த 98 ஆம் ஆண்டு கோரப்பட்ட விண்ணப்பங்களின் அடிப்படையில் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படாதவர்களுக்கும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுப் பின்னர் செய்முறைப் பரீட்சைக்கு அழைக்கப்படாதவர்களுக்குமான கலந்துரையாடல் இன்றுகாலை 10.30 மணிக்கு யாழ். நாச்சிமார் கோவிலடியில் உள்ள கலைமகள் பாலர் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

மேற்குறிப்பிட்ட அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கூட்ட ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ-10)

## ஆசிரியர் செயலமர்வு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 16

யாழ். கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலைகளில் தரம் 7, தரம் 10 வகுப்புகளில் தமிழ்மொழியும் இலக்கியமும் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள் நாளை திங்கட்கிழமை தொடக்கம் நடைபெறவுள்ளன.

'தமிழ்மொழியும் இலக்கியமும்' பாட ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள் நாளையும் 22 ஆம்25 ஆம் திகதிகளிலும் காலை 8 30 மணிக்கு யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெறவுள்ளன

ஆங்கிலப் பாட ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள் நாளையும் எதிர்வரும் 19 ஆம் திகதியும் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளன.

முன்பு 20 ஆம் திகதி நடைபெறவிருந்த தமிழ்மொழியும் இலக்கியமும் பாடத்திற்கான செயலமர்வு 25 ஆம் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளதாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ஐ-10)

# வவுனியா வாசிகளின் நடமாட்டம் 'பாஸ்' நடைமுறைகளால் முடக்கம்

## வவுனியா வலம்

-ரா.இளவரசன்-

வவுனியாப்பகுதியில் பாதுகாப்பைப் பலப்படுத்த படையினர் எத்தனையோ பகீரத முயற்சிகளை மேற்கொண்டபடி இருக்கிறார்கள். புலிகள் ஊடுருவி விடக் கூடாதென்று புதுப் புதுத் திட்டங்களை அமுல் படுத்திக் கொண்டே இருக்கிறார்கள். ஆயினும் அவை அந்தத் திட்டங்களை எல்லாம் தவிடு பொடியாக்கி — புதுத் திட்டங்களையெல்லாம் புஷ்வாணமாக்கி — விடும் சம்பவங்கள் அடிக்கடி நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன.

### போலிப் பாஸ் புழக்கத்தால் தடுமாறும் படைத்தரப்பு

புலிகளின்நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தவென நடைமுறைப்படுத்தப்படும் புதுப் புது நடைமுறைகளெல்லாம் புலிகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தியதோ என்னவோ — வவுனியா வாழ் அப்பாவி மக்களின் நடமாட்டத்தை வெகுவாகக் கட்டுப்படுத்தி விட்டது.

ஏராளமான பத்திரங்கள், அட்டைகள், விண்ணப்பங்கள் என்று ஏகப்பட்ட காகிதாதிகளை செலவழித்து தனியாக பொலீஸ் அத்தியட்சகர் ஒருவரையும் பொலீஸ் பொறுப்பதிகாரிகள்சிலரையும்ஏராளமான ஆண், பெண் பொலீசாரையும் சேவைக்கமர்த்தி மாதாந்தம் லட்சக்கணக்கில் பணம் செலவளித்து நடைமுறைப் படுத்தப்படும் வதிவிடப் பாஸ் நடைமுறை இவைகளில் ஒன்று. இந்த வதிவிடப் பாஸ் நடைமுறையால் வவுனியாவிலும் புலிகளின் நடமாட்டம் கட்டுப்பாட்டில் வந்துவிடும்—புலிகள் கொழும்புக்குள் ஊடுருவுவது இயலாத காரியமாகிவிடும்— என்று மனப்பால் குடித்தபடி இருந்த படையினருக்கு அண்மைக் காலத்தில் புலிகளின் ஊடுருவலானது பெரும் அதிர்ச்சியைக் கொடுத்திருந்தது ஒருநாள் பாஸ், ஒரு கிழமைப் பாஸ், 14 நாள் பாஸ், ஒருமாதப் பாஸ், 3 மாதப் பாஸ், வவுனியாவில் நடமாட மட்டும் வரையுள்ள பாஸ், நாட்டில் எங்கும் சென்று வரக்கூடிய திறந்த பாஸ், நிரந்தரப் பாஸ் என்று ஏகப்பட்ட பாஸ்கள். அதிலும் காட் பாஸ், கொம்பியூட்டர் பாஸ் என்று பலவிதங்களில் வடிவமைக்கப்பட்ட அட்டைகளாகப் பாஸ்கள் வழங்கப்படுகின்றன

பாஸ்களை வழங்குவதற்கு முன் புலனாய்வுப் பிரிவினரின் விசாரணைகள். பிணைக் கையொப்பங்களை எல்லாம் மேற்கொண்ட பின்னரே இந்த வதிவிடப் பாஸ்கள் வழங்கப்பட்ட போதிலும் புலிகள் ஊடுருவுகிறார்கள், கொழும்பு செல்ல அனுமதி நிராகரிக்கப்பட்டவர்கள் கொழும்பிலே நடமாடுகிறார்கள். நேற்றும் முந்தநாளும் இடம்பெயர்ந்து வந்தவர்களெல்லாம் வவுனியாவில் நீண்டகாலம் வாழ்ந்து வருவதற்குச் சாட்டியான 3 மாத பாஸ்களை வைத்திருக்கிறார்கள். இவையெல்லாம் எங்கனம் அவர்கள் கையில் கிடைத்ததென மண்டையைக் குழப்பிக்கொண்டார்கள் பாதுகாப்புத்தரப்பினர். விசாரணைகளை முடுக்கிவிட்டார்கள். ஆனால் கிடைத்த தகவல் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்திருக்கிறது.

வவுனியாவில் உள்ள ஓர் அப்பாவித் தமிழர் படையினரால் விநியோகிக்கப்பட்ட வதிவிடப் பாஸ்களையெல்லாம் குடிசைக் கைத்தொழிலாக வீட்டிலேயே தயாரித்து விநியோகித்தது தெரியவந்திருக்கிறது. கொம்பியூட்டர்களைக் கையாளத் தெரிந்த பிள்ளைகளின் உதவியுடன் வதிவிடப் பாஸ்களைத் தயாரித்து பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த மனைவியின் துணையுடன் சிங்கள எழுத்துக்களை எழுதி சந்தேகமெதுவும் ஏற்படாத விதமாகச் சகட்டு மேனிக்குப் பாஸ்களைத் தயாரித்து 5 ஆயிரத்திற்கும் 10 ஆயிரத்திற்கும் விநியோகித்தது தெரிய வந்தது.

ஆடிப்போய் விட்டது படைவட்டாரம். சாதாரணமான ஒரு கொம்பியூட்டர் வைத்திருக்கும் தனி நபரே இந்த வதிவிடப் பாஸ்களைத் தயாரித்து விநியோகித்திருக்கிறார் என்றால், இதே போல் கொம்பியூட்டர் வைத்திருக்கும் எத்தனைபேர் எத்தனை பாஸ்களைத் தயாரித்திருப்பார்கள்?

இதனைவிட அரசின் ஆவணங்களுக்கெல்லாம் போலி ஆவணங்கள் தயாரித்து அந்தப் போலி ஆவணங்களைக் கொண்டு மிகப் பெரும் தாக்குதல்களையெல்லாம் சர்வசாதாரணமாக நடத்திவிட்டு வரும் புலிகள் தரப்பு இதே போல் எத்தனைபாஸ்களைத் தயாரித்து. எத்தனை பேரை உலாவ விட்டிருக்கிறதோ? என்று கலங்கிப் போயிருக்கிறது படைத்தரப்பு. ஏனென்றால் சாதாரண ஒரு கொம்பியூட்டர் வைத்திருந்த நபரே இவ்வளவுக்கு வித்தியாசம் தெரியாத விதமாக பாஸ்களைத் தயாரித்திருக்க நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய கொம்பியூட்டர்களை வைத்திருக்கும் புலிகளுக்கு இஃதொன்றும் கஷ்டமான காரியமாக இருந்திருக்காது என்பதையும் படைத்தரப்பு ஏற்றுக்கொண்டிருக்கும்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

## வாழ்விலும், பணியிலும்...

(ஏழாம் பக்கத் தொடர்)

அனுபவத்தால் பிற்காலத்தில் பிழையற்ற பல அச்சுப் பதிப்புக்களை இவரால் மேற்கொள்ள முடிந்தது. அத்துடன் எழுத்தாற்றல் மிக்க இவர் அருமையான பல புத்தகங்களை எழுதி வெளியிட்டார். இவரது நூல்கள் யாவும் சமூகநன்மை கருதி சைவத்திற்கும் தமிழுக்கும் மீளவுயிர் அளிப்பதாக ஆக்கம் பெற்றன.

பிள்ளையவர்களின் நூல்கள் பற்றிய ஓர் ஆழமான கண்ணோட்டத்தின் மூலம் நாம் சில தெளிவான முடிவுகளுக்கு வரலாம். இவர் பக்திப் பாசுரங்கள், உரை நூல்கள், வரலாற்று ஆய்வு விளக்கக் கட்டுரைகள், கவிதைகள், தமிழ் வளர்க்கும் நூல்கள் என்பனவற்றையும் அகராதி ஒன்றையும் ஆக்கியுள்ளார். இவர் ஆற்றல் மிக்க நூலாசிரியராக, உரையாசிரியராக, பதிப்பாசிரியராக விளங்கியுள்ளார் இவரதுநூல்களுள்யாழ்ப்பாண அகராதி மிகப்புகழ் பெற்றது. ஆயிரத்து அறுநூற்று முப்பத்தாறு பக்கங்களைக் கொண்ட இந்நூல் தமிழ்மொழியிலமைந்த அகராதிகளுள் முதன்மையானது எனும்பெருமைபெறுகின்றது. இவரது தமிழ்த்தொண்டு கருதிய நூல்களாக கருவூர் மான்மியம், திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் வரலாறு, சிவசேத்திராலய மகோற்சவ விளக்கம், ஏகாதசி புராண அரும்பதவுரை, நைடதஉரை என்பன திகழ்கின்றன. சமய நூல்களாக யாப்பெருங்கல விருத்தி, கூர்மபுராண விரிவுரை, பழனித்தல புராணவுரை, திருவானைக்கலம்பகம், சிவராத்திரிப் புராணவுரை என்பவற்றைக் காட்டலாம். ஆனாலும்பிள்ளையவர்களின் நூல்களில் ஈடுபாடுறுவதற்கு நிச்சயமாக வாசகர்களிடம் ஒரு மனமுதிர்ச்சியுந் தெளிவும் தேவைப்படுவதை மறுப்பதற்கில்லை.

பாரதி கண்ட கனவினை மெய்ப்பிக்கும் வகையில் இறவாத புகழுடைய தமிழ் நூல்கள்பலவற்றை யாத்த கதிரைவேற்பிள்ளையவர்கள் பற்பல அரியதமிழ்நூல்களைமீள்பதிப்புச்செய்தார். சிறந்த பதிப்பாசிரியர் என்ற இவரது புகழுக்கு ஆதாரமாக அகத்தியத் தேவாரத்திரட்டு, கதிர்காமக் கலம்பகம் என்பன திகழ்கின்றன. இவர் இறை பக்தியும் இரக்கசிந்தனையும் உடையவராக விளங்கினார். மக்கள் சேவையும் மகேசன் சேவையும் ஒருங்குற ஆற்றிய மாண்புமிகு மனிதராக இன்றும் போற்றப்படுகின்றார், தம்பசிட்டியில் இவரது பெயரில் ஐக்கியக்கடன் நாணய சங்க நிதிபுதவித்திட்டம் உண்டு. அத்துடன் தேவாரத் திருமுறைகளைப் பண்ணோடு இசைத்து அவற்றினைப் பேணி வளர்க்கும் நோக்குடன் சுப்பிரமணிய கான சபையை நிறுவினார். அருள் வேலவன் மீது இவர் ஆக்கிய சுப்பிரமணிய பராக்கிரமம் எனும் நூல்இவரது பக்தியின் திறத்தை எடுத்துரைக்கிறது.

அறிவொளியும் ஆன்மீக வொளியும் சுடர்ந்திட பிள்ளையவர்களின் பணி தொடர்ந்தது. எதிர்பாராது விடினும் அவரதுசெயல்களின் மகிமை, பெருமையையும் புகழையும் அவருக்குப் பரிசளித்தன. தெளிந்த நல்லறிவுப் பயன்பாடு அவருக்குப் பற்பல பட்டங்களை அள்ளி வழங்கிற்று அவதானப் பரீட்சையில் இவரது அளப்பரிய ஆற்றலால் 'சதாவதானி' எனும் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். பிறமதப் பிரசாரங்களுக்கு எதிராக வாதிடுந்தகைமை கருதி 'மாயாவாத தும்ச கோளரி' எனப்பட்டார். பின்னர்' காவித்துவான்', 'அத்துவித சித்தாந்த மகோத்தாரணர்' எனும் சிறப்புப் பட்டங்கள் இவரைச் சேர்ந்தன. கண்டன நூல்களுள் குறிப்பிடத்தக்க 'போலியருட்பா மறுப்பு' எனும் நூலினை ஆக்கியதால் இவர் 'போலியருட்பாப் பிரபந்த நிர்க்கந்த கிஞ்சகக் கண்டனப் பிரசண்ட மாருதம்' எனப் புகழப்பட்டார்.மேலும் சைவ சித்தாந்தத்தின் பாற்கொண்ட தெளிவினால் 'சைவசித்தாந்த மகாசரபம்' என்னும் பெயராலும் அழைக்கப்பட்டார். அழகிய தமிழை அடுக்கு அடுக்காகச் சுவைபடப் பிரயோகிப்பதன் காரணமாக 'பெருஞ்சொற்கொண்டல்' எனப் போற்றப்பட்டார். இவற்றினை அறிகையில் சதாவதானி அவர்களின் விசாலமான நல்லறிவும் சமூகத் தொண்டும் ஓரளவு எம்மால் உய்த்துணரப்படலாம்.

கலங்கரை விளக்குகள் போற்றத் தகுந்தவை. நீளக் கடல் வெளி கருநீலப் பரப்பாய்க் கண்ணுக்கெட்டிய தூரம் வரை விரிந்து கிடக்க தம்நிலை புரியாது தத்தளிக்கும் மாலுமிகளுக்கு அவை வழிகாட்டும் — அவை திசை காட்டும் பணியால் மக்கள் உயிர் காப்பவை. இவற்றின் ஒளி பற்பல மைல்களின் அப்பாலும் ஒளி எறியும்; உதவும் நன்மைகள் பல பயக்கும். இதே போல 'பாமரராய் விலங்குகளாய் உலகனைத்தும் இகழ்ச்சி சொலப்பான்மை கெட்டு' தமிழர் குறுகி நின்ற காலத்தில் நன்றே தமிழ் செழிக்க சைவந் தழைக்க முயற்சிகள் பல செய்த பல்லாயிரக்கணக்கான மக்களை சுதாவதானி அவர்கள் நல்வழிப்படுத்தினார்கள். பட்டங்கள் பல பெறினும் தொழில்கள் பல செய்யினும் சதாவதானி அவர்கள் தம் முழு வாழ்வினையும் மக்கள் தொண்டுக்கும் இறைதொண்டுக்குமே அர்ப்பணித்தார் சமூகம் நல்லறிவு பெறுவதற்குத் தம் நாவன்மையாலும் எழுத்து வன்மையாலும் பெரிதும் பாடுபட்ட இவர்நாட்டுக்குழைத்த நல்லவராக நம் மண்ணின் கலங்கரை விளக்காக என்றும்மக்கள் எண்ணத்தில் வாழ்ந்திருப்பது திண்ணம். இவரது 93 ஆவது குருபூசைத்தினம் பங்குனி மாத மக நட்சத்திரத்தில் கொண்டாடப்படுகிறது 1097 ஆம் ஆண்டில் இவரது பூதவுடல் மறைந்தாலும் உலக மக்கள் மீது இவர் கொண்டிருந்த பேரன்பும் ஆற்றிய சேவைகளும் காலத்தை வென்று வாழும்.

''அறிவிலே தெளிவு நெஞ்சிலே உறுதி அகத்திலே அன்பினோர் வெள்ளம்''

எனும் கூற்றிற்கு வரைவிலக்கணமான இவரது ஞானமும் அறிவும் என்றும் எம்மைவழிப்படுத்தும் என்பது திண்ணம்.

★

## பத்திரிகை ஆழிக்குள் படித்தெடுத்த முத்துக்கள்

ஒரு மொழி ஒவ்வொரு நுட்ப பேதங்களையும் காட்டுதற்குரிய பல சொற்களைப் பெற்றிருக்கலாம். ஒரு மொழியில் எழுதப்பட்ட ஒரு விடயத்தை அதன் கருத்துச் சிதையாமல் மற்றொரு பாஷையில் எழுத வேண்டுமாதலின் அந்தப்பாஷையும் அதி நுட்பங்களைப் பிரத்தியேகமாகக்காட்டக்கூடிய சொற்களைக் கொண்டிருக்க வேண்டுமன்றோ? அவ்வாறின்றேல்' கருத்துச் சிதையாது எவ்வாறு மொழிபெயர்ப்பு தோன்ற முடியும்? நிற்க. 'சயன்ஸ்' நிலைவரமான உலக உண்மைகளை வெளிப்படுத்துவதாகும். இதில்வரும்குறியீடுகளை விளக்கவும், எல்லாப் பாஷைகளிலும் பிரத்தியேகச் சொற்களில்லையே. இவ்வாறிருக்க மகான்கள் தங்கள் கருத்தை ஒருமொழியில் கூறியிருந்தால், அதை அவ்வாறே பிறமொழியில் காட்டிவிடலாம் என்பது சாத்தியமாகுமோ? ஓர் இலக்கியத்தை ஏதோ ஒரு பாஷையில் மொழிபெயர்த்து விடலாமே தவிர எல்லாப்பாஷையிலும் மொழிபெயர்த்து விடலாம் என்பது முடியாத காரியம். மொழிபெயர்ப்பைக் கொண்டு பாஷை ஆழத்தை தீர்மானிக்க முடியுமோ?. ஆசிரியர் கருத்துக்கள் சுயமானவையாகவும் இரகசியார்த்தமுற்றவையாகவும் மகத்துவமுற்றவையாகவும் இருப்பின் அவற்றை விளக்கிச் சொல்வதே முடியாத காரியமாயிற்றே: பின் எவ்வாறு அவற்றை மொழிபெயர்த்தல் முடியும்?

மொழிபெயர்ப்பை ஒரு சாதாரணமாகக் கொண்டு இலக்கியத்தின் பெருமையைத் தீர்மானிக்கலாகாது. மொழிபெயர்ப்பில் கவனிக்கவேண்டிய விடயங்கள் இரண்டாம்.அவையாவன (i) மூலத்தில் அமைந்துள்ள கருத்துக்கள். தத்துவங்கள் சிதையாமை (II) மொழிபெயர்ப்பு மொழிதமது இயற்கைநடைகெடாதுநிற்றல்.

இந்த இரு அம்சங்களையும் கையாண்டு வரத்தக்கவர்கள் மிகச்சிலரே. பல பாஷையின் மொழி பெயர்ப்பிலும் பைபிள் தனது மூல பாஷையின் தத்துவங்களை இழந்தே நிற்கிறது ஆலயத்தாரர்கள் இதனை நன்கறிவர் ஆயினும் தங்களுக்கு வேண்டியது அதிலுள்ள கருத்துகளேயாதலின் அவற்றை ஆதரித்து வருகின்றனர். அவர்களுக்குப் பிரதானம் விடயமே. மற்ற அழகுகள் எல்லாம் இரண்டாம் பட்சமே.

**அறிஞர் குமரகுருபர ஆதித்தர்**

(நவசக்தி — ஈசுவரவருடம், ஆவணி மாதம்)

★ ★ ★ ★ ★

இன்று உலகமெங்குமே மனிதரின் ஆயுட்காலம் அதிகரித்திருக்கிறது என்ற விஷயம் உலக ஆரோக்கிய சங்கத்தின் அறிக்கை வாயிலாகத் தெரிய வருகிறது. உலகில் உள்ள உயிரினங்களில் அதிக காலம் வாழ்பவன் மனிதனே என்று ஆராய்ச்சி மூலம் கண்டு அந்தச் சங்கம் அறிவித்திருக்கிறது.

மனிதன் எந்த வகையில் முதுமை எய்துவதாகக் கருதுகிறோம். அவன் உத்தியோக ஒய்வு பெறும் காலந்தான் முதுமையடையும் காலம் என்ற அபிப்பிராயம் தான் சாதாரண வழக்கத்தில் இருந்து வருகிறது. அப்படிப் பார்க்கும் போது, நாட்டுக்கு நாடு சட்டப்படி மனிதர் ஒய்வு பெறும் வயது வேற்றுமைப் படுகிறது. பொது வாழ்க்கையில் இருந்து மனிதன் விடுதலை பெறும் வயது ஆர்ஜென்ரீனாவில் 36; பிரான்ஸ் நியூஸிலாந்து நாடுகளில் 60; ஆஸ்திரேலியா பெல்ஜியம், செக்கோசிலாவாக்கியா, டென்மார்க், பின்லாந்து, ஐக்கிய அமெரிக்கா ஆகியவற்றில் 65; ஸ்வீடனில் 67; கனடா, அயர்லாந்து, நோர்வே இவற்றில் 70.

(சிலுமின —சிங்களவார இதழ் 17-3-62; மஞ்சரி — ஏப்ரல் 1963)

**கண்டெடுத்து வழங்குபவர்:**
**கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை**

# வாழ்விலும், பணியிலும் சமூகத்துக்கு வழிகாட்டியாக விளங்கிய சதாவதானி

சதாவதானி நா. கதிரைவேற்பிள்ளையின் 93 ஆவது ஆண்டு நினைவு விழாவை ஒட்டி 'உதயன்' அனுசரணையுடன் நடத்தப்பட்ட நினைவுக் கட்டுரைப் போட்டியில் முதற்பரிசு பெற்ற கட்டுரை இது. இதனை வரைந்த சங்கத்தானையைச் சேர்ந்த ச. சாரங்கா சஞ்சீவியில் சிறுகதைகள், கவிதைகள் மூலம் பரவலாக அறியப்பட்ட ஓர் இளம் படைப்பாளி ஆவார்.

''பொழுது புலர்ந்தது
நாம் செய்த தவத்தால்
புன்மை யிருட்கணம்
போயின யாவும்
எழுபதம் பொற்சுடர்
எங்கணும் பரவி
எழுந்து விளங்கியது
அறிவெனும் இரவி''

தமிழ்த்தாயின் சிரத்தினிலே தான் யாத்த கவிகளினால் தங்கக்கிரீடம் சூட்டிய தெய்வீகக் கவிஞன் பாரதி பாடிய பாரத மாதாவின் திருப்பள்ளியெழுச்சி வரிகள் தாம் அவை! செய்தவத்தால் பொழுது புலர்ந்து இருளகல அறிவெழிற்கதிரவன் சுடர் வீசியெழும் அற்புதக் காட்சியை அவ்வரிகளினால் அற்புதமாய்க் கவிஞன் எடுத்துரைக்கிறான். இங்கு நாம் இப்பொழுதில் தெள்ளிய அறிவுடைச் சூரியன் ஒன்று எம் தேசமதில் எழுந்த வரலாறாகச் சதாவதானி கதிரைவேற்பிள்ளை அவர்களின் வாழ்வையும் செயலையும் நோக்கி அவர் எவ்வாறு சமூகத்திற்கு ஒரு வழிகாட்டியாக விளங்கினார் என ஆராய்வோம்.

உலகினை உய்விக்க வேண்டிக் காலங்கள் தோறும் அறிஞர்களும் மகான்களும் அவதரிக்கின்றார்கள். விண்ணுலகிலிருந்து மண்ணுலகிற்கு இறங்கிவந்த தேவமைந்தர்களாக உலக மக்களை அவர்கள் நல்வழிப்படுத்துகிறார்கள். இவ்வாறு ஈழவள நாட்டின் வடபுலக் கலங்கரை விளக்காகச் சதாவதானி கதிரைவேற்பிள்ளை அவர்களைக் குறிப்பிடலாம். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், சின்னத்தம்பிப்புலவர், இலக்கண வித்தகர் கந்தமுருகேசனார், அருளம்பலச்சுவாமிகள், சிவபாதசுந்தரனார் என்பவர்களும் வடபுலத்திற் தோன்றிய நல்லறிஞர்களே.

கதிரைவேற்பிள்ளை அவர்களின் ஜனனம் 1871 ஆம் ஆண்டு புலோலிமண்ணின் பெருந்தவப் பேற்றிற்கு மீண்டுமொரு சான்று வழங்கிற்று. ஆம்! பிள்ளையவர்களின் பிறப்பு பிற்காலத்தில் புலோலி மண்ணிற்கு முடிசூட்டிற்று எனின் மிகையல்ல. இவர் மழலை மாறாப் பிஞ்சு வயதிலேயே ஆரம்பக்கல்வியை மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாசாலையில் தொடங்கினார். சின்னஞ் சிறு பராயத்திலே கூரிய மதிநுட்பமும் நுண்ணறிவும் கொண்டு விளங்கினார். இயல்பிலேயே நற்பண்புகள் பலவும் நிறைந்தவராக, அபாரமான ஞாபகசக்தி உடையவராக, நாவன்மை மிக்கவராக, கவியாற்றல் கைவரப்பெற்றவராக, கல்வியிற் தேர்ச்சி மிகுந்தவராக இவரது மாணவப்பருவம் பெருமையுடன் துலங்கிற்று. இனிய இருபதுகளில் ஆசிரியப் பணியில் இறங்கிய இவர் தொடர்கல்வி கருதித் தமது இருபத்தோராவது வயதில் தமிழகம் சென்றார் ''திரைகடலோடியுந் திரவியந்தேடு'' என்பது ஆன்றோர் கூற்று. பிள்ளையவர்கள் கல்விச் செல்வந் தேடிக் கடல் கடந்த வரலாறு அவர் தமது அறிவினை விருத்தி செய்வதிற் கொண்டிருந்த பேரார்வத்தினைப் புலப்படுத்தி நிற்கின்றது.

தெளிந்த நல்லறிவும் தீர்க்கமான சிந்தனைகளுங் கொண்ட இவர் தமிழ், வடமொழி ஆகிய இருமொழிகளிலும் தலைசிறந்து விளங்கினார். எனினும் தாய்மொழியாம் தமிழ் மீது இவர் கொண்ட அன்பும் ஆற்றலும் அளவிடற்கரியன. அந்நியராட்சியில் நலிந்து அன்னைத் தமிழ் பொலிவிழந்து போய் விடாதிருக்கவும் சைவஞ் செழிக்கவும் பிள்ளையவர்கள் தம் வாழ்வினையே அர்ப்பணித்தார்கள்.

மொழியும் மதமும் செழுமையுறின் அதைச் சார்ந்த சமூகம் வளமுறுதல் வழமையானதொன்றே. இவை கருதி நாம் கடந்த காலத்தை எடுத்து நோக்கின் தமிழ் செழிக்கத் தம் வாழ்வை ஈந்தவர்களையும் சைவம் சிறக்க வைத்து ஞான மார்க்கத்தில் வாழ்ந்தவர்களையும் அறிய முடியும். சிலர் சைவமுந்தமிழும் ஒருங்குறப் போற்றிய சான்றோர்களாகவும் விளங்குகிறார்கள். இவ்வாறான ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், சுவாமி ஞானப்பிரகாசர், காசிவாசி செந்திநாதையர் வழியில் சதாவதானி அவர்களும் மொழியும் மதமும் மேம்பட உழைத்தவராகப் போற்றப்படுகிறார். கூடவே சிறந்த ஒரு சிந்தனையாளராகவும் சமூக நோக்குடைய சீர்திருத்தவாதியாகவும் இவர் திகழ்ந்தார். இவரது நல்லெண்ணம் பரப்பும் நல்லியற்புக்கு ஏற்புடையதாக ஆசிரியப் பணி அமைந்தது. சென்னையிலும் சீர்மிகு அறிவால் புகழ்பெற்ற இவர் வேம்பேரி உயர்நிலைப்பள்ளி சாந்தோம்உயர்நிலைப்பள்ளி, என்பவற்றிலும் மாணவர் மனங்கவர் நல்லாசானாக விளங்கினார். இவரது கற்பித்தற்பணி கல்லாதானையும் கற்றிடத் தூண்டிடும் வகையில் அமைந்திருந்தது. பிள்ளையவர்களின் கற்பித்தல் திரு. வி. க. போன்ற பெரியோர்களை உருவாக்கிற்று.

சமூகம் நல்வழிப்பட இவரது பேச்சாற்றலும் எழுத்தாற்றலும் பெரிதும் துணையாயின. கற்றற்கு அரிய நூல்களையும் ஐயந்திரிபறக் கற்று அவற்றை இலகு தமிழில் பாமரர்க்கும் புரியும் பழகு தமிழில் எடுத்துரைத்தார். சுவைபடப்பேசும் ஆற்றலால் சைவமும் தமிழும் கொண்ட பெருமைகளை இலகுவாக மக்களிடம் பரப்பினார். இவரது சொற்பொழிவுகள் ஆழக்கருத்தும் அழகுறு சொற்களும் கொண்டமைந்ததனால் சமூகத்தில் சிறந்த பேச்சாளர்களை உருவாக்க உதவிற்று. பல்துறைத் தேர்ச்சியுடைய இவர் 'எறும்பு' எனுந் தலைப்பில் எட்டுமணி நேரம் ஓர் அற்புதமான பேச்சினை ஆற்றிய சம்பவம் இவரது பேச்சாற்றலைக் குன்றிலிட்ட தீபமென்னத் துலங்க வைத்தது.

இவரது நீரோடையன்ன சொற்பெருக்காற்றல் சைவ மறுமலர்ச்சிக்குப் பெருந்துணை செய்தது. பிறமதப் பிரசாரங்கள் முற்றுமுழுதாக முடுக்கி விடப்பட்டிருந்த காலத்தில் கம்பீரக்குரல் சைவஞ்செழிக்க முழங்கிற்று. இவரது கருத்தாழம் மிக்க பேச்சினால் கற்றோரும் மற்றோரும் கவரப்பட்டனர். விவாதிக்கும் பாங்கு, இலக்கியச் சுவை, இனிய கருத்துக்கள், ஆழ்ந்த பொருளமைதி, நகைச்சுவைக் கலப்பு எனும் பண்புகள் கொண்ட பேச்சுக்களால் சமூகத்திற்கே அறிவொளி ஊட்டினார். ஆறுமுக நாவலருக்கும் இராமலிங்க சுவாமிகளுக்கும் இடையில் எழுந்த அருட்பா — மருட்பாச் சர்ச்சையை தன் வாதத்திறமையால் முடிவுக்கு கொண்டு வந்த பெருமையும் இவரைச் சாரும். சமூகசேவைகள் விரிய விரிய அகந்தனிலே ஆன்மீகப் பேரொளியும் அறிவொளியும் விகசிக்கப் பிள்ளையவர்களின் பலன் கருதாப் பணி தொடர்ந்தது. கவியாற்றல் மிகக் கொண்டிருந்த இவர் தமது குலதெய்வமான புதுச்சந்நிதிக்கந்தன் மீது பற்பல பதிகங்களையும் பாசுரங்களையும் பாடியதுடன் அவற்றைப் பண்ணோடு இசைக்கும் வல்லமையும் கொண்டவராகத் திகழ்ந்தார்.

'செய்யும் தொழிலே தெய்வம்' எனும் கோட்பாடு உடைய கதிரைவேற்பிள்ளையவர்கள் சிறுவயது முதல் தாம் செய்யுந் தொழில்களில் மிகுந்த சிரத்தையுடையவராகத் திகழ்ந்தார். இவர் சென்னையில் மேற்கல்வி தொடர்ந்த பொழுதில் ஓர் அச்சகத்தில் வேலை செய்ய வேண்டியிருந்த பொழுதில் அச்சுக்கலை பற்றிப் பயின்றார் அதன் நுட்பங்களைத் தெளிவாகக் கற்றுக்கொண்ட

[8 ஆம் பக்கம் பார்க்க]

**ச. சாரங்கா**

ஆரியகாந்தி — உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

## நோய் தீர்க்கும் மூலிகை

### இஞ்சி

இஞ்சியானது சிஞ்சிபிரேசியே (Zingiberaceae) தாவரகுடும்பத்தைச் சேர்ந்த ஒரு மூலிகையாகும். இதனை ஆங்கிலத்தில் ஜிஞ்சர் (ginger) என்றும் சிங்களத்தில் ''இங்குரு'' (Inguru) என்றும் சமஸ்கிருதத்தில் 'சுண்டி' என்றும் அழைப்பர்.

இதன் தாவரவியற் பெயரானது சிஞ்சிபர் ஒஃபிசினாலிஸ். இந்த தாவரமானது மருத்துவத் தேவைக்கு மாத்திரமன்றி சாதாரணமாக எல்லா வீடுகளிலும் சமையல் அறைகளில் பாவிக்கப்படுகிறது.

இம்மூலிகையின் (Rhizome) நிலக் கீழ்த்தண்டுப் பகுதியே சமையலுக்கும் மருத்துவத்திற்கும் பாவிக்கப்படும்.

★ இம்மூலிகையில் காணப்படும் இரசாயனப் பதார்த்தங்களாவன:

சிஞ்சரோன் ஒருவகை விரைவாக ஆவியாகும் எண்ணெய், கம்ஃபீன், ஜிஞ்சிபெரீன், ஜிஞ்சரோல், ஒலியோ ரெசின், மாப்பொருள், ஜிஞ்சரீன் என்பன ஆகும்.

★ இஞ்சியானது பின்வரும் இரசாயன செயற்பாடுகளைக் கொண்டு எமது உடலில் செயலாற்றும் தன்மை வாய்ந்தது:-

- அகற்றுவாயு அகற்றி.
- சமிபாட்டுத் தூண்டி.
- உமிழ்நீர் பெருக்கி.

இஞ்சியின் தோலானது நச்சுத்தன்மையானது. எனவே தோலை நீக்கி பாவித்தல் வேண்டும்.

இஞ்சியின் தோலை நீக்கி கல்சியம் காபனேற்று, கல்சியம் சல்பேற்று — கரைசல்களில் ஊறவிட்டு வெயிலில் காயவிட்டால் சுக்கு பெறப்படும்.

இஞ்சிக் கிழங்கை ஊறுகாய், தேன் ஊறல், வெல்லப்பாகு, பழச்சாறு ஊறல் என பல்வேறு முறைகளில் உண்ணலாம்.

★ இஞ்சியை தோல்நீக்கி சிறுசிறு துண்டுகளாக்கி தினந்தோறும் உண்டுவரின் உடலை நோயின்றி ஆரோக்கியமாகப் பேணலாம்.

★ இஞ்சிச்சாறு, மாதுளம் பூச்சாறு, தேன் சம அளவு எடுத்து ஒரு நாளைக்கு 35 மில்லி லீற்றர் அருந்திவரின் அஸ்மா நோய் (இழுப்பு) இருமல் நீங்கும்.

★ இஞ்சி, சுக்கு, மிளகு, திற்பலி, ஏலம், அதிமதுரம், சீரகம், சந்தனத்தூள் ஒவ்வொன்றிலும் 4கிராம் எடுத்து சிதைக்து 1,400 மில்லி லீற்றர் நீரில் 130 மில்லி லீற்றர் காய்ச்சி எடுத்து 5—6 வேளை சாப்பிட்டு வர உடலில் ஏற்படும் சூடு, வெப்பம் தணியும்.

★ இஞ்சிச்சாறு, ஈரவெங்காயச்சாறு, எலுமிச்சம்சாறு சம அளவு பயன்படுத்தினால் அஸ்மா, இருமல், வாந்தி, ஓங்காளம் தீரும்.

**இ. மணிவர்ணன்**
சித்த மருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்

★ இஞ்சியைப் பாலில் அரைத்து அதில் ஒரு தேக்கரண்டி எடுத்து 18 மில்லி லீற்றர் பாலில் கலந்து காலை மாலை கொடுக்க செரியாமையால் ஏற்படும் கழிச்சல், இருமல், அஸ்மா, குடற்புண், குடல் நோய்கள், பசியின்மை போன்றன தீரும்.

★ இஞ்சியை வாயில் மென்று உமிழ் நீரைத்துப்ப— குரலில் கரகரப்பு, தொண்டைப் புண் தீரும்.

நீரிழிவு நோயுள்ளவர்:- இஞ்சிச்சாறு, தேன் சம அளவு தினமும் எடுக்கலாம்.

## எதிரொலி..

**- இடியன் -**

● நிரந்தர நியமனம் கோரும் தொண்டர் ஆசிரியர்களின் உண்ணாவிரதப் போராட்டம் தொடர்கின்றது!

★ நிரந்தரமாகவே தொண்டர் ஆசிரியர்களாக அவர்கள் நியமிக்கப்படுவார்களோ என்னவோ...!

● பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இவ்வாண்டில் பகிடிவதை மீண்டும் தலைதூக்கி இருக்கின்றதாம்!

★ பல்கலைக்கழகம் ''கொல்'' கலைக் கழகமாக மாறி விடுமோ? என்று பெற்றோர் அஞ்சுகின்றனர்.

● ஏற்கனவே திருமணம் செய்த ஒருவர் அந்த உண்மையை மறைத்துக் கொண்டு புதிதாக ஒருத்தியைத் திருமணம் செய்துவிட்டாராம்!

★ அது திருமணம் அல்ல; 'திருட்டு' மணம்!

● இலங்கையின் இனப்பிரச்சினை விஷயத்தில் இந்தியா மீண்டும் தலையிடக்கூடாது என்கின்றார் டிக்ஸிற்!

★ மூ'னர் பிழை விட்ட படியால் தான் இத்தகைய ஆலோசனை என்றால் இந்த ஆலோசனையே பிழையானது என்பதை உணரும் காலம் வந்தால்...? 'மாஜி'' கள் தாம் ''மாஜி'' கள் தாம் என்பதை மறக்கும் போது இப்படித்தான் ஏதாவது உளறிக்கொண்டிருப்பார்கள்!

● மரண வீட்டிற்குச் சென்ற ஒருவருடைய சைக்கிள் அங்கேயே திருடப்பட்டு விட்டது!

★ திருடுவதென்று தீர்மானித்தவனுக்கு மணவீடென்ன மரண வீடென்ன!

● குடிபோதையில் வீட்டிற்கு வந்த ஒருவன் தன் மனைவியின் காதைக் கடித்து விட்டாராம்!

★ காதலியைக் ''காதிலி''யாக்கி விட்டாரோ?

● மின்சார விநியோகம் சில இடங்களில் மட்டும் சீராக நடைபெறுகின்றது; பல இடங்களில் 'லைற்றுகள் மின்னிக்கொண்டிருக்கின்றன'!

★ மின்சாரம், 'மினி'சாரம், 'மின் மினி'சாரம்—என மூன்று வகைகள் இருக்கின்றனவோ?

● எழுத்து ஜோதிட முறையைப் பின் பற்றி, ஒருவரின் கையெழுத்தைப் பரிசீலித்தே தமக்குத் தேவையான ஊழியர்களைத் தெரிவு செய்வதற்கு மேற்கு ஐரோப்பிய நாடுகள் பல முடிவு செய்துள்ளனவாம்!

★ அதாவது, ஒருவருடைய கையெழுத்தைக் கொண்டு அவருடைய தலை எழுத்தை நிர்ணயிக்கப்போகிறார்கள்!

● இனப் பிரச்சினைத் தீர்வு சம்பந்தமாகக் கலந்துரையாடப்பட்ட விஷயங்களை வெளியிடுவதில்லை என பொ. ஐ. முன்னணியும் ஐ.தே.க.வும் இணங்கியுள்ளன.

★ தேர்தல் காலத்தில் தத்தமக்குப் பொருத்தமான விஷயங்களைப் பற்றிப் 'பொழிந்து' தள்ளுவதற்கு இது உதவக் கூடும்!

● இந்தியாவில் புலிகளின் தடையை நீக்குமாறு கலைஞர் பரிந்துரை செய்யமாட்டாராம்!

★ இலங்கைப் பிரச்சினை சம்பந்தமாக அவர் எப்போதோ ''சரிந்துரை''க்க ஆரம்பித்துவிட்டார் என்பது எல்லோருக்கும் தெரிந்தது தானே!

ஸ்ரீ முருகன் விளையாட்டுக் கழக நிதிக்கான

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

முதலாம் பரிசு இலக்கம் 3656
இரண்டாம் பரிசு இலக்கம் 3877
மூன்றாம் பரிசு இலக்கம் 4898

ஆறுதல் பரிசுகள்
★ 0160 ★ 4577 ★ 0222
★ 3672 ★ 3664 ★ 2174

மேற்படி இலக்கச் சீட்டுகளுக்கு உரியவர்கள் 19—04—2000 (புதன்கிழமை) அன்று ஸ்ரீமுருகன் சன சமூக நிலையத்தில் வந்து பரிசில்களைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நன்றியுடன்
ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழக உறுப்பினர்கள்
ஸ்ரீமுருகன் சனசமூக நிலையம்,
புலவரோடை, வதிரி,
கரவெட்டி.
(சி/11854)

## 3 ஆம் ஆண்டு நினைவலைகள்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 06 — 10 — 1946 | 16 — 04 — 1997 |

### அமரர் கனகன் தங்கராசா
(இ. போ. ச. நடத்துநர் – பருத்தித்துறை)

அன்பின் சிரகமாய்
பாசத்தின் பிறப்பிடமாய்
அன்புடன் அரவணைத்த
அன்புத் தந்தையே!
பாதியிலே சென்றதென்ன?
காணாது கண்ணீரில் கரைகின்றோம் நாளும்
காலங்கள் பல சென்றாலும் மறையாது உங்கள் நினைவுகள்.

உங்கள் நினைவில் வாழும்:
மனைவி, பிள்ளைகள்,
மாமன், மாமி.

சுலோசனா பவனம்,
வல்லை வீதி,
தொண்டமானாறு.
(75443)

## கண்ணீர் அஞ்சலி



### அமரர் வைத்திலிங்கம் பொன்னையா
(இளைப்பாறிய அதிபர் - சேர் கனகசபை வித்தியாசாலை)

பன்னாலை திருவெம்பாவை கூட்டுப் பிரார்த்தனைச் சபையின் ஆரம்ப உறுப்பினராகவும், பின் தலைவராகவும் தற்சமயம் போசகர்களில் ஒருவராகவும் இருந்து சபையை வழிநடத்தியும் ஆலயங்களின் முன்னேற்றத்திற்கு உழைத்தும் எமது ஊர் மக்களின் சைவ நெறி வாழ்க்கைக்கு உறுதுணையாய் இருந்த அமரர் வைத்திலிங்கம் பொன்னையா அவர்கள் 13-04-2000 அன்று லண்டன் நகரில் இறைபதம் எய்திய செய்தி அறிந்து ஆழ்ந்த துன்பமடைந்துள்ளோம். அன்னாரின் குடும்பத்திற்கு ஆறுதல் கூறுவதுடன் அன்னாரின் ஆத்மா இறைவனடி சேரப் பிரார்த்திப்போமாக!

நிர்வாக சபையினர்,
பன்னாலை திருவெம்பாவை
கூட்டுப் பிரார்த்தனைச் சபை,
பன்னாலை, தெல்லிப்பழை.

[75446]

## வாராந்த நிகழ்வு

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும் வாராந்த நிகழ்வில் எதிர்வரும் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சி. பத்மலிங்கத்தின் இசைக் கச்சேரி இடம்பெறும்.

இந்நிகழ்வுக்கான அறிமுக வுரையை கலாபூஷணம் வ. செல்லத்துரை நிகழ்த்துவார்.

(ஐ-173-30)

## வவுனியா வாசிகளின்..

(6 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதனால் நடைமுறையில் உள்ள சில கொம்பியூட்டர் மூலம் உருவாக்கப்பட்ட வதிவிடப் பாஸ்களை ரத்துச் செய்துவிட்டு புதிய பாஸ்களை வழங்க நடவடிக்கை எடுத்தனர் படையினர். அதன்படி புதிய பச்சை வர்ணத்தில் பாஸ்கள் நடைமுறைக்கு வந்தன. ஆனால் மறுவாரமே அதேபோல பச்சை வர்ணப் போலிப் பாஸ்கள் பஜாரிலே உலா வரத் தொடங்கிவிட்டன.

தற்போது மீண்டும் அந்தப் பாஸ்களை ரத்துச் செய்துவிட்டு புதிய பாஸ் ஒன்றை காட் வடிவில் வழங்கி வருகிறார்கள். இதனால் படையினர் பெருமளவு பணத்தை விரயம் செய்து வரும் அதேவேளை மக்களுக்கும் பணச் செலவும், அலைச்சலும்தான் மிஞ்சுகிறது. இதேவேளை தனி நபர் ஒருவர் தமது வருமானத்திற்காகச் செய்த இந்த முயற்சியால் தற்போது அவரிடம் பாஸ் பெற்றுக் கொண்டவர்களில் பலர் உள்ளே இருக்கிறார்கள், பலர் தலைமறைவாகி இருக்கிறார்கள்.

இதற்குப் பின்னரும் ஊடுருவல்கள் இடம்பெறாது என்று எந்தவித உத்தரவாதமும் இல்லாத நிலையில் கண்ணுக்குள்எண்ணெய் விட்டுக் காத்திருக்கிறார்கள் படையினர். பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்படாமல், புலிகளின் நடமாட்டமும் கட்டுப்படுத்தப்படாமல், வீணாகப் பணத்தையும், மனித வலுவையும் விரயம் செய்யும் இந்தப் பாஸ் நடவடிக்கை சிலரின் பைகளை நிரப்ப மட்டுமே பயன்படுகின்றது என்பது தான் நிதர்சனமான உண்மையாகும். ★

## வீதி புனரமைப்பு ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 16

கடந்த 35 வருட காலமாகப் புனரமைக்கப்படாத நிலையில் இருந்த வடலியடைப்பு—சங்கானை வீதி சித்தன்கேணி கலைவாணி வீதி ஆகியவற்றைத் திருத்தும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

முன்னுரிமை அடிப்படையில் இந்த வீதிகளைப் புனரமைக்கும் பணி இடம்பெறுவதாக வலி. மேற்குப் பிரதேசசபைத் தலைவர் என். திரிலோகநாதன் தெரிவித்தார். (ஐ-3)

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி க. பொ. த. உயர்தரம் (2002) அனுமதி

கலைப்பிரிவில் வெற்றிடங்கள் உள்ளன. விண்ணப்பிக்கவும்:

பாடங்கள்: தமிழ்
இந்துநாகரிகம்
அளவையியல்
புவியியல்

(சி/11850) அதிபர்,

எல்லோருக்கும் எமது புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

☎ 2789 DEVI JAFFNA ☎ 2789

வெள்ளி விழாவை நோக்கி.....
(06 - 06 - 2000)

## தேவி அச்சகம்

114/19, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
(தேவி அச்சக ஒழுங்கை)
(75449)

## கண்ணீர் அஞ்சலி

பன்னாலை ஐ. நா. சங்கத் தலைவராகிய

### வைத்திலிங்கம் பொன்னையா

அவர்கள் 13 - 04 - 2000 ஆம் திகதி லண்டனில் காலமான செய்தி அறிந்து அன்னாரின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தைத் தெரிவித்து கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

நிர்வாகசபையினர், அங்கத்தவர்கள்,
பன்னாலை ஐ. நா. சங்கம்,
தெல்லிப்பழை.
(75456)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்





அமரர்
### சுந்தப்பு பாலகிருஷ்ணன்
(சட்டத்தரணி, முருகேசு அன் நீலகண்டன் நிறுவனம், கொழும்பு).

அன்னை மடியில்
13 - 11 - 1944
ஆண்டவன் அடியில்
26 - 04 - 1999
திதி: 14 – 04 - 2000

அமரர்
### சிதம்பரப்பிள்ளை லோகநாதன்
(நீர்ப்பாசன பொறியியலாளர், பெரியமடு, மன்னார்).

அன்னை மடியில்
23 - 05 - 1948
ஆண்டவன் அடியில்
24 - 04 - 1999
திதி: 13 – 05 – 2000

பிரிவால் துயருறும்:
- குடும்பத்தினர்

'நாவலர் இல்லம்'
கரவெட்டி மேற்கு, கரவெட்டி.

(75134)

# பௌத்தமதம் கூறும் போதனைகளில் சமாதானத்துக்கு மட்டுமே வழியுண்டு

நோர்வே நாட்டின் அனுசரணையுடன் சமாதானத்திற்கான பேச்சுக்கள் ஆரம்பமாகவுள்ள சூழ்நிலையில் நோர்வே நாட்டின் முன் முயற்சிகளைக் கண்டித்தும் யுத்தத்தை உரிய முறையில் நடத்துமாறு கோரியும் கொழும்பில் பௌத்த பிக்குகள் ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தினர் இந்த ஆர்ப்பாட்டப் பேரணியைக் கண்டித்து ''யுக்திய'' சிங்கள வார இதழில் எழுதப்பட்ட ஆசிரியர் தலையங்கத்தின் தமிழாக்கம் இது.

பௌத்த தர்மமானது உலகிலுள்ள மதக் கோட்பாடுகளில் மிகவும் மென்மையான, அஹிம்சாவாதப் போக்குடையதாகும். பௌத்த போதனைகளும் முற்றிலுமாக வன்முறையற்ற —அஹிம்சாவாதப் போதனைகளாகும். இந்த பௌத்த தர்மம், பௌத்த போதனைகள் ஆகியனவற்றில் சமாதானத்திற்கு மாத்திரமே வழியுண்டு; இடமுண்டு. யுத்தம்பற்றிய பேச்சுக்கே இடமில்லை. ஆனால் பௌத்தர்கள் வெட்கித் தலைகுனியும் சம்பவங்களே தற்போது இடம் பெற்றுவருகின்றன.

வரலாற்றில் இதற்கு முன்னர் இடம்பெற்ற சம்பவங்களைப் போலவே இந்தச் சமாதான விரோத ஆர்ப்பாட்டப்

இருப்பினும் அதற்கான வசதிகள் அரசிடமில்லை. வரவு—செலவுத் திட்டத்தில் ஒதுக்கக்கூடிய அதி உச்ச நிதி ஒதுக்கீட்டை யுத்தத்திற்காக அரசு ஒதுக்கிய போதிலும் யுத்தத்தைத் தொடருவதற்குப் போதுமான மனிதவளம் (சிப்பாய்கள்) அரசிடமில்லை. 15 ஆயிரம் சிப்பாய்களைப் படையில் சேர்ப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்ட போதிலும் சுமார் இரண்டாயிரம் பேர் மட்டுமே படையில் சேர முன்வருகிறார்கள். அதுமாத்திரமல்ல போர் முனைகளில் பணியாற்றும் சிப்பாய்கள் படையை விட்டுத் தப்பி ஓடும் சம்பவங்களும் அதிகரித்து வருகின்றன. தப்பியோடிய சிப்பாய்களின் எண்ணிக்கை அதிகமாகவுள்ளதால் அவர்களுக்கு மன்னிப்பு வழங்கி மீண்டும் படையில் இணைக்க அரசாங்கம் அவர்களுக்கு பலதடவைகள் வாய்ப்பளிக்கிறது. மன்னிப்புக்காலத்தைப் பயன்படுத்தி மீண்டும் படையில் இணைந்த படையினர் மீண்டும் படையை விட்டுத் தப்பி ஓடும் சம்பவங்களும்இடம்பெறுகின்றன.

யுத்தம் காரணமாக நாட்டில் ஏற்கனவே குற்றச் செயல்கள் அதிகரிக்கத் தொடங்கியுள்ளன. நாட்டில் தற்போது இடம்பெறும் குற்றச் செயல்களுக்குப் பொறுப்பானவர்கள் ஒன்றில் படையைவிட்டுத் தப்பி ஓடிய சிப்பாய்கள் அல்லது படை

## தேரர்கள் நடத்திய ஆர்ப்பாட்டம் வெட்கித் தலைகுனியும் சம்பவம்

பேரணிக்கும் பௌத்த பிக்குகளே முன்னணி வகித்தனர் சமாதானப் பேச்சுக்களைக் கைவிட்டு யுத்தத்தை உரிய முறையில் தொடருமாறு இந்தப் பௌத்த பிக்குகள் கோருகின்றனர். பௌத்த பிக்குகளின் கருத்துப்படி சமாதானப் பேச்சுக்கள் முற்றாகக் கைவிடப்படவேண்டும். அதற்குப் பதிலாக யுத்தத்தை தீவிரப்படுத்தி அதன் மூலம் வெற்றியை அடைய வேண்டும்.

யுத்தம் உரிய முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும் எனப் பௌத்த பிக்குகள் தெரிவிக்கும் கருத்தானது இதுவரை காலமும் யுத்தம் உரிய முறையில் மேற்கொள்ளப்படவில்லை என்பதாகும். ஆனால் உண்மையான காரணம் என்னவெனில் யுத்தத்தைத் தொடர்வதற்கு அரசாங்கத்திற்கு பல தேவைகள்

யில் தற்போது பணியாற்றும் சிப்பாய்கள் ஆவர், இது நாட்டில் புதிதாகத் தோன்றியுள்ள ஒரு தேசியப் பிரச்சினையாகும்.

இக்காரணங்களால் நாட்டிலுள்ள பொதுமக்களுக்கு யுத்தம் போதும் போதும் என்றாகி விட்டது. ''மீண்டும் யுத்தம் வேண்டாம்'' என்ற உணர்வே பொதுமக்களிடம் அதிகரித்துவருகிறது. இந்த நாட்டிலுள்ள முக்கிய அரசியல் கட்சிகள் இரண்டும் தத்தமது பிரச்சினைகள் அனைத்தையும் ஒரு புறம் ஒதுக்கி வைத்துவிட்டு தீர்வு குறித்துப் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதானது பொதுமக்களின் எண்ணங்கள் மற்றும் உணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ள காரணத்தாலேஆகும்.

எனவேதான் யுத்தத்தை விரும்பும் அரசியல் வாதிகளும் அமைப்புகளும் மக்களின் வெறுப்புக்கு ஆளாகியுள்ளனர். இவர்களது பேச்சுக்களுக்கோ உபதேசங்களுக்கோ இப்போது மக்கள் செவி சாய்ப்பதில்லை. எந்த இடத்திலும் எந்த நேரத்திலும் இவ்வாறான அரசியல் வாதிகள் மற்றும் அமைப்புகளுடன் இருப்பவர்கள் எண்ணிக்கையில் மிகச் சொற்பமான போர்வெறி கொண்ட ஒரு சிலர் மாத்திரமே ஆவர். பொதுமக்களின் ஒத்துழைப்பு அவர்களுக்குக் கிடைப்பதாகத் தெரியவில்லை.

எனவேதான் இந்தப் போர்வெறி கொண்டவர்கள் தமது பிரசாரங்களுக்கு, ஆர்ப்பாட்டங்களுக்கு பௌத்த பிக்குகளைப் பயன்படுத்துகிறார்கள். பௌத்த பிக்குகளுக்கு முதலிடம் அளிக்கிறார்கள். நாட்டில் பெரும்பான்மையினர் பின்பற்றும் மதத்தின் முக்கியஸ்தர்களான பௌத்த பிக்குகளின் மீது பௌத்தர்கள் கொண்டுள்ள கௌரவம் மற்றும் மரியாதையைப் பயன்படுத்தி போர் நெறியை விதைப்பதே இந்தச் சிறுபான்மையினரின் தேவையாகும்.

இவ்வாறான சூழ்நிலையில் இந்நாட்டு மக்கள் மிகவும் கவனமாக, மதி நுட்பத்துடன் செயற்பட வேண்டும். ஆர்ப்பாட்டங்களுக்குத் தலைமை வகிப்பவர்கள் பௌத்த பிக்குகள் என்பதால் அத்தகைய ஆர்ப்பாட்டங்களுக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்பதல்ல ஒவ்வொரு பொதுமகனும் தனது சுய புத்திக்கேற்பவும் பௌத்த தர்மத்திற்கேற்பவும் உடன்பாடாக இருந்தால் மாத்திரமே அவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இவ்வேளையில் பௌத்த பிக்குகளுக்கும் வேண்டுகோள் ஒன்றை விடவேண்டியுள்ளது. மனிதப் படுகொலைகளுக்குக் காரணமான யுத்தத்தை ஒரு புறம் ஒதுக்கிவிட்டு பௌத்த தர்மத்திற்கு கௌரவமளிக்கும் அஹிம்சாவாத — சமாதானத்தின் பக்கம் உங்கள் பார்வையைத் திருப்புங்கள் என அனைத்துப் பௌத்த பிக்குகளுக்கும் வேண்டுகோள் விடுக்கிறோம். மதத்தலைவர்கள் சிறந்த வழியைப் பின்பற்றினால் மாத்திரமே பெரும்பான்மையினரான பௌத்த மக்கள் பெருமைப்படக்கூடிய சந்தர்ப்பம் உருவாக வாய்ப்பு ஏற்படும். ★

தமிழில்: கஜனி

# வெளிமாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி வழங்கப்பட்டோர்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 16

யாழ். குடாநாட்டில் இருந்து வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் உதயனில் வெளியாகி வருவது தெரிந்ததே.

பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம் மாதம் 12 ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:-

**சங்கானை**

(138104 ஏ), (139659 ஏ), (139659 பி), (141210 ஏ), (141211 ஏ), (141369 ஏ), (141309 பி), (141410 ஏ), (141735 ஏ), (141735 பி) (141747 ஏ), (141747 பி), (141799 ஏ), (142'43 ஏ), (142144 ஏ)

**கோப்பாய்**

(143201ஏ), (143201பி),

**நல்லூர்**

[127306ஏ], [131606ஏ], [135438ஏ], [135487ஏ] (135499ஏ],) (135768ஏ), (139534ஏ), (139534பி), (139534சி), (139534டி), (139776ஏ), (141293ஏ), (141317ஏ), (141317பி), (141335ஏ), (141365ஏ), (141370ஏ), (141384ஏ), (141730ஏ), (141730பி), (141730சி), (141780ஏ), (141780பி), (142102).

**சண்டிலிப்பாய்**

(127435ஏ), (139718ஏ), (139718பி), (139740ஏ), (139767ஏ), (141266ஏ), (141355ஏ), (141374ஏ), (141374பி), (142106ஏ),

**தெல்லிப்பழை**

(135567ஏ), (135604ஏ), (135906ஏ), (135906பி), (139574ஏ), (141215ஏ), (141215பி),(141224 ஏ), (141244 ஏ), (141244 பி), (141244 சி), (141244 டி), (141260 ஏ), (141260 பி), (141260 சி), (141260 டி), (141703 ஏ), (141731 ஏ)' (141731 பி), (142127 ஏ), (142128 ஏ), (142151 ஏ), (142151 பி), (142151 சி), (142151 டி),

**உடுவில்**

(134285 ஏ),(139745 ஏ), 1(39745 பி), (139745 சி), (139745 டி), (141204 ஏ), )141204 பி), (141204 சி), (141255 ஏ), (141280 ஏ), (141325 ஏ),(141325 பி), (141341 ஏ), (141377 ஏ), (141732 ஏ), (141736 ஏ), (141736 பி), (141740 ஏ), (141740 பி), (141740 சி), (141740 டி), (141740 ஈ), (141756 ஏ), (141756 பி), (142108 ஏ) (142108 பி), (142131 ஏ), (142153 ஏ), (142153 பி), (142153சி), (142157 ஏ).

பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம் மாதம் 14 ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேசசெயலக ரீதியாக வருமாறு:—

**யாழ்ப்பாணம்**

(124659 ஏ),(124659 பி), (128662 ஏ), (130059ஏ)', (130126 ஏ), (130126 பி), (137301 ஏ), (137301 பி), (138704 ஏ), (138741ஏ), (138741 பி), (138924ஏ), (138958 ஏ), (138958 பி), (138958சி), (138958டி), (138958ஈ), (138995ஏ), (138995பி), (138995சி), (139078ஏ), (139078பி), (139078சி), (139078டி), (139155ஏ),. (140386ஏ), (140386பி), (140436ஏ), (140436பி) (140436சி), (140496ஏ), (140512ஏ), (140512பி), (140592ஏ), (140645ஏ), (140646ஏ), (140730ஏ) (140730பி), (140736ஏ), (140740ஏ), (140740பி), (140760ஏ), (140773ஏ), (140776ஏ)' (140776பி), (140783ஏ), (140790ஏ), (140790பி), (140797ஏ), (140797பி), (140806ஏ), (140810ஏ), (140811ஏ), (140811பி), (140815ஏ), (140816ஏ), (140823ஏ), (140823பி) (140829ஏ), (140829பி), (140833ஏ), (140838ஏ), (140838பி), (140844ஏ), (140846ஏ), (140846பி), (140849ஏ), (140849பி), (140849சி), (140849டி), (140849ஈ), (140859ஏ), (140859பி), (140863ஏ), (140863பி), (140870ஏ), (140870பி), (140870சி), (140870டி), (140875ஏ), (140876ஏ), (140879ஏ), (142686ஏ) (142687ஏ), (142688ஏ), (142694ஏ), (142694பி), (142705ஏ), (142709ஏ), (142717ஏ), (142717பி), (142721ஏ), (142721பி). (142726ஏ), (142748ஏ), (142755ஏ), (142755பி), (142755சி), (142772ஏ), (142772பி), (142773ஏ), (142773பி), (142773சி), (142773டி), (142784ஏ), (142793ஏ), (142798ஏ), (142802ஏ), (142830ஏ)' (142830பி), (142830சி), (142859ஏ), (142862ஏ), (142862பி), (142890ஏ), (142890பி), (142890சி), (142890டி), (149864ஏ), (149364பி).

**நல்லூர்**

(136981ஏ), (136981பி), (136981சி), (136981டி), (140549ஏ), (140603ஏ), (140726ஏ), (140726பி), (140745ஏ), (140761ஏ) (140761பி). (140762ஏ) [140762பி], [140762சி], [140762டி], [ 40762ஈ], [140762எவ்], [140808ஏ], [140808பி], [140808சி], 140808டி], [140820ஏ], [140841ஏ], [142696ஏ], ]142696பி], (142750ஏ). [142788ஏ], [142874ஏ], [143874பி], [149852ஏ], [149852பி]. (க–ரி)

# விசர்நாயினால் கடியுண்ட ஜி. சீ. ஈ மாணவி மரணம்

5 மாதங்களுக்கு முன் விசர் நாயினால் கடியுண்ட 19 வயது மாணவி ஒருவர் நீர் வெறுப்பு நோய்க்கு இலக்காகி நேற்று முந்தினம் இரவு மரணமானார்.

சாவகச்சேரி சங்கத்தானையைச் சேர்ந்த சுப்பிரமணியம் கீதா (வயது 19) என்ற இளம்பெண்ணே மரணமானவராவார். இவர் சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஜி. சீ. ஈ உயர்தர இறுதி ஆண்டு மாணவியாவார்.

கடந்த நவம்பர் மாதம் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் கட்டாக்காலி நாயொன்று இவரைக் கடித்ததாகவும், அதற்கு அவர் ஏற்புத்தடை ஊசி மாத்திரம் போட்டுக் கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. கடந்த இரு நாள்களுக்குமுன்காய்ச்சலுடன் நீர் வெறுப்பும், மூச்சுத் திணறலும் ஏற்படவே சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். பின்னர் அங்கிருந்து இரவு யாழ். ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்ட இவர் யாழ் ஆஸ்பத்திரியில் மரணமானதாகத் தெரிவிக்கப்பட்டது.

மரணவிசாரணையின் பின் சடலம் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது.

(ஐ–15)

## பயிற்சி

வலி. தென்மேற்கு, ஏப்ரல் 16

யாழ். சுகவாழ்வு நிறுவனத்தினால் 16 பெண் உளவளத் துணையாளர்களுக்கான விசேட பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது.

பயிற்சி முடிவுற்றதும் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் தமது சேவையை இவர்கள் ஆரம்பிப்பர் என சுகவாழ்வுச் செயலாளர் தெரிவித்தார். (இ–185)

## ஆரம்பவிழா

யாழ்ப்பாணம், ஏப்ரல் 16

உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய முறைசாராக் கல்விப் பிரிவினரால் நடத்தப்படவுள்ள உடை அமைத்தலும், மின் இணைப்பும் பயிற்சி நெறிகளின் ஆரம்ப விழா நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் சு. யோகராசா தலைமையில் ஆரம்பமாகவுள்ள இந்த நிகழ்வில் அகதிகள்புனர்வாழ்வுநிறுவனத் தலைவர் இ நல்லதம்பி முதன்மை விருந்தினராகவும், யாழ். இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர் அ. பஞ்சலிங்கம், திருமதி இ. சண்முகரட்ணம், யாழ். தொழில் நுட்பக் கல்லூரி விரிவுரையாளர் நா. யோகராசா; முறைசாராக் கல்வி திட்ட அலுவலர் ச. சிவானந்தன் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

[ஐ–9]

## நாய்களுக்கு வலிப்பு நோய்

வலி. கிழக்கு, ஏப்ரல் 16

குடாநாட்டில் நாய்களுக்கு புதுவித வைரஸ் நோய் ஏற்பட்டுள்ளதால் நாய்கள் வலிப்பு ஏற்பட்டு இறப்பதாக கால்நடை வைத்திய அதிகாரி பணிமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

ஒவ்வொரு கால்நடை வைத்திய அதிகாரி பணிமனை பிரதேச பிரிவுகள் தோறும் மாதாந்தம் சுமார் 20 நாய்கள் வீதம் வலிப்பு ஏற்பட்டு இறந்துள்ளன.

இந்த வைரஸ் நோயைக் கட்டுப்படுத்த கால்நடை வைத்திய அதிகாரி பணிமனையினர் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ-ரி–180)

## இடம்பெயர்ந்த 127 குடும்பங்கள் கரவெட்டிக்கு!

நெல்லியடி, ஏப்ரல் 16

வடமராட்சி கிழக்கு, தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி ஆகிய இடங்களிலிருந்து சுமார் 127 குடும்பங்களைச் சேர்ந்த 419 பேர், கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் உறவினர், நண்பர்கள் வீடுகளில் தங்கியிருப்பதாக கரவெட்டி பிரதேச செயலர் எஸ். ஸ்ரீநிவாசன் தெரிவித்தார்.

மருதங்கேணியிலிருந்து 33 குடும்பங்களும், சாவகச்சேரியிலிருந்து 40 குடும்பங்களும், பளையிலிருந்து 47 குடும்பங்களும் கடந்த 6 ஆம் திகதி முதல் இப்பிரிவில் இடம்பெயர்ந்து வசித்து வருகின்றன.

(ஐ-109)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

வசந்திஜா என்னும் பெயருடைய மக்கள் வங்கி கொழும்பு காசோலை இல. 265332 ரூபா 1,43,000 தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து வசந்திஜா, இல-100. K.K.S வீதி, சுன்னாகம் (பழைய பொலிஸ் நிலையம் முன்பாக) என்னும்முகவரியில்கொடுத்து தகுந்த சன்மானம் பெற்றுக் கொள்ளவும்.

(75417)

குமரையா இராசலிங்கம் ஆகிய எனது தேசிய அ. அட்டை-(இல.451790404V), விசேட அ. அட்டை (இல. 0901003891) என்பன பணப்பையுடன் யாழ். நகரில் 11-4-2000 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கு. இராசலிங்கம், 16, சந்தலமாதா கோயில் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும்.

(75389)

சுடலைப்புலம் சுன்னாகம் என்னும்முகவரியைச் சேர்ந்த டாக்டர் ரதினி இராஜதுரை என்பவரதுதேசிய அ. அட்டை (685400790V), விசேட அ. அட்டை, தொழில் அ. அட்டை என்பன யாழ்ப்பாணத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகப் பகுதியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(75399)

## இறைச்சிக்கோழி

இறைச்சிக்கோழி Broiler மற்றும் கல்பேட்ஸ் சேவல், விறாத்துக் குஞ்சு என்பன மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: இல- 68, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம்.

(75376)

இறைச்சிக்கோழி புறோயிலர் விற்பனைக்குண்டு. தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: வே. இமானுவேல் 40, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

(75385)

நியாய விலையில் சகல நிறையிலும் புறோயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்குண்டு. 54/2 சந்தன மாதா கோயில் முன் ஒழுங்கை கொழும்புத்துறை வீதி, பாண்டியன் தாழ்வு, யாழ்ப்பாணம். அல்லது 21/A ஆஸ்பத்திரி வீதி, (முலவைச் சந்தி அருகில்), யாழ்ப்பாணம். (75362)

Broiler, Cullbirds, Cockerels, இறைச்சிக் கோழிகள் சுத்தம் செய்து (பாதிக் கோழி உட்பட) தினமும் பெற்றுக்கொள்ளலாம். நியாயமான விலை, நுட்பமான நிறுவை, சுறுசுறுப்பான சேவை. தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச் சந்தையடி நல்லூர். (75287)

இறைச்சிக்கோழி (Broiler) கல்பேட்ஸ் விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: இல. 15, 6 ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். (சின்னக்கடை அருகில்).

(75364)

புறோயிலர் இறைச்சிக் கோழி விற்பனைக்குண்டு. சுத்தம் செய்தல் இலவசம். இல. 31, மாஸ்ட பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம், (கண்ணா வீடியோ சென்ரர் வளவு).

(75119)

## விற்பனைக்கு

6 அடி நீளம், 3 அடி உயர முடைய பாவித்த 2 சோக் கேஸ், சைக்கிள் பக்கிள் மெசின், அவோன் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: இல. 134, 4 th Cross Street, Jaffna.

(75291)

பொக்கற் டோக் இன ஆண், பெண் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: க. செல்வராணி இல. 23, மூளாய் வீதி, மத்தியூஸ் றோட், யாழ்ப்பாணம். (75433)

8 அடி Dish Antena. L.T 999, Euro Star Receiver, JR × 8, CD (2000 W) Setம் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 41, இராசாவின் தோட்ட வீதி, யாழ்ப்பாணம் T P 2226. (75431)

Panasonic SR 30 9000/- Aiwa NSX 555 CD System 1400W 30 000/- விற்பனைக்குண்டு. பார்வையிடும் நேரம் காலை 7 - 8, மாலை 6 - 7. தொடர்பு: 39, புதிய செம்மணி வீதி, கல்வியங்காடு (75351)

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 32 வயது பூர நட்சத்திர மணமகனுக்கு ஏற்ற மணமகள் தேவை. இவர் லண்டன் பிரஜாவுரிமையுடன்பொறியியல்(Engineer) பட்டம் பெற்று முகாமையாளர் பதவி வகிக்கிறார். தொடர்பு: 39, K K S வீதி, பூனாறி மரத்தடி, கொக்குவில். TP. 2537. (75404)

## ஆங்கிலம்

O/L. A/L. G A Q. B. A. பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கும். தொடர்பு: கு. சோமசுந்தரம், சந்தை ஒழுங்கை, சுதுமலை வடக்கு, மானிப்பாய். (75325)

## புறொயிலர் கோழிகள்

பிறிமா இன புறொயிலர் கோழிகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. எல்லா நாள்களிலும் பெற்றுக் கொள்ளலாம். சனி, ஞாயிறுகளில் சுத்தம்செய்தும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: V.S. 227, பிறவுண் வீதி, [கலட்டிச் சந்தி அருகில்], யாழ்ப்பாணம். (75373)

## MATHS ENGLISH

O/L Distinction, Credit, G. A Q, A/L ஆங்கிலம் ஆண்டு 6 – 10 உட்பட கற்பிக்கப்படும். B Sc (Cey) 85, சிவன் கோயிலடி, சிவன் கோயில் பின்புறம், திருநெல்வேலி. (75316)

## படிவம்

க. பொ. த. (சா/ த) பரீட்சை 1999 டிசெம்பர் பெறுபேறு மீளாய்வு செய்வதற்கான விண்ணப்பப்படிவம் விற்பனையாகின்றது. விண்ணப்ப முடிவு திகதி 20. 04. 2000 பாரதி 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி/11763)

## SPOKEN ENGLISH

கலபமாக ஆங்கிலத்தில் கதைக்கப்பயில. ஆசிரியர் ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி வகுப்புக்கள் புதன், வியாழன், சனி ஞாயிறு, இல 426, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணத்திலும், ஏனைய நாள்கள் நாகலிங்க சுவாமிகள் வீதி, சங்கானையிலும் நடைபெறுகின்றது. (75374)

## நாய்க்குட்டி விற்பனை

நல்லஇன ஜேமன் சல்பேட் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: இல. 41, கந்தர்மடம், பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

(75375)

## கண்டெடுக்கப்பட்டது

22-02-2000 அன்று கொடுக்கோட்டை, அராலி வீதியில் (789 பஸ் பாதையில்), தங்க நகை ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும். தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: கிராம உத்தியோகத்தர், சங்கரத்தை.

(75390)

# வள்ளுவர் அக்கடமி

உரும்பிராய்

## O/L பகல் நேர வகுப்புகள்

ஆரம்பம்:
17-04-2K
திங்கள்
காலை 8. 00 மணி
(S. L. T)

அதிபர்

(75442)

# ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்
15
—
07
—
1928



மறைவு
16
—
04
—
1999

திருமதி
## பொன்னையா கற்பகம் அம்மையார்

அம்மையாரது அன்பாகிய மலர் எம்
இதயத் தடாகத்தில் மலர்ந்து கொண்டே
இருக்கின்றது. அம்மலர் இறைவன் சந்நிதியிலும்
பேரின்ப நிலையில் இருக்குமாறு வேண்டுகின்றோம்.

திரு. ஆ. பொன்னையா
(கணவர், ஓய்வுபெற்ற அதிபர்),
சகோதரர், மைத்துனர்,
பெறாமக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்.

அல்வாய் மேற்கு,
அல்வாய்.

(சி/11848)

ஏழாலை தெற்கு, களபாவோடை
ஸ்ரீ வசந்தநாகபூஷணி அம்பாள் ஆலயம்

# சித்திரைப் பௌர்ணமி விழா

எதிர்வரும் 18 – 04 – 2000 செவ்வாய்யன்று மேற்படி ஆலயத்தில் சித்திரைப் பௌர்ணமி விழா விசேடமாக நடைபெறவுள்ளது.

காலை 7. 00 மணிக்கு அபிஷேகமும் 10. 00 மணிக்கு பூஜையும் அதனைத் தொடர்ந்து விசேட மேளக்கச்சேரியுடன் அம்பாள் வீதியுலா வந்து அன்னதானமும் வழங்கப்படும்.

அடியார்கள் அனைவரும் இவ்விழாவில் கலந்து அம்பாள் அருளைப்பெற வேண்டுகிறோம்.

-தேவஸ்தானம்

(75438)

# வில்லூன்றி புனித தீர்த்தம்
# சித்திரா பூரணைப் பெருவிழா

18 – 04 – 2000 செவ்வாய்க்கிழமை

**தீர்த்தோற்சவம்**

காலை 6.45 மணி வசந்த மண்டபப் பூசை
காலை 8.00 மணி தீர்த்த வாரி
காலை 9.00 மணி முதல் 10 மணி வரை
தீர்த்தக்கட்டத்தில் அனுக்கிரகம்
காலை 10.00 மணி சுவாமி கோயிலுக்கு எழுந்தருளல்

**பிதிர்க் கடன்கள்**

காலை 8 15 மணிக்கு தீர்த்தவாரி முடிந்தவுடன் பொதுமக்கள் தீர்த்த சங்கற்பம் செய்து தீர்த்தமாடவும் பிதிர் தர்ப்பணங்கள் செய்து கொள்ளவும் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தர்மபரிபாலன சபை,
வில்லூன்றி தேவஸ்தானம்
பரிபாலன சபை,
வில்லூன்றி புனித தீர்த்தம்

வில்லூன்றி.

(75429)

# 19 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## திருமதி அ. கமலாதேவி (B. A.)

(அபிவிருத்தி உத்தியோகத்தர்)

தோற்றம் 03-01-1948
மறைவு 15-4-1981

திதி 15-4-2000

அன்பின் திருவுருவாய் பண்பின் பிறப்பிடமாய் விளங்கி, எம்மை விட்டுப் பிரிந்து ஆண்டுகள் பத்தொன்பது ஆனாலும், உங்கள் நினைவுகள் என்றும் எம்முள் உயிர் வாழும்.

உங்கள் நினைவால் வாடும்
தாயார், சகோதரன், மைத்துனி,
மருமகன், மருமகள், சகோதரர்கள்,
சகோதரிகள், சிறிய தந்தையர்கள்,
சிறியதாய்மார்கள், மாமன்மார்,
மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார்.

"அக்கா அகம்"
இணுவில்.

(75422)

# அதிரடி அரங்கு

அரசாங்கம் பொது, வங்கி, வர்த்தக விடுமுறை தினம் என அறிவித்த நாளில் கடைகள், வர்த்தக நிலையங்களைமூடும்படிமனிதநேய மற்றும் பொது அமைப்புகள் வேண்டுகோள் விடுக்க.....

மறுபுறத்தில் அரசாங்கம் உத்தியோகபூர்வமாக விடுமுறை அளித்த அந்த நாளில் வர்த்தக நிலையங்களைத் திறக்கும்படி அரசுப்படைகள் வற்புறுத்தியமை கடந்த புதனன்று யாழ் குடாநாட்டில் நடந்தது எல்லோருக்கும் தெரிந்த விடயம்.

மனிதநேய அமைப்புகள் கூட்டாக நடத்திய ஹர்த்தாலை உடைப்பதற்கு எடுக்கப்பட்ட கூத்து அது. அதை விட்டுவிடுவோம். இனி விடுமுறை விவகாரம் தொடர்பான விடயத்துக்கு வருவோம்.

கடந்த 8ஆம் திகதி யாழ்.சிவில் நிர்வாக அலுவலகத்தில் சிவில் நிர்வாக இணைப்பதிகாரி பிரிகேடியர் ரி.ஜி.திலகரத்ன தலைமையில் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அக்கூட்டத்தில் வர்த்தக சங்கப் பிரதிநிதிகள், ஆங்கில மருத்துவ சங்கப்பிரதிநிதிகள் மற்றும் யாழ். மாவட்ட உதவித் தொழில் ஆணையாளர் ஆர்.தர்மலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

உதவித் தொழில் ஆணையாளர் அங்கு தொழில் சட்டங்கள் குறித்து விளக்கமளித்தார்.

அக்கூட்டத்தில் வர்த்தக நிறுவனங்களை சனிக்கிழமை அரைநாளும், ஞாயிற்றுக்கிழமை முழுநாளும் மற்றும் பொது விடுமுறைகள், பூரணை விடுமுறைநாள்கள் ஆகியவற்றில் மூடுவது எனத் தீர்மானிக்கப்பட்டது. நல்ல இணக்கமான முடிவு: வரவேற்கத்தக்கது.

ஆனால் ஒரு விடயம் புரியவில்லை.

அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ அறிவித்தலின்படி இந்த வருடத்தில் உள்ள 26 பொது விடுமுறைநாள்களில் ஆக எட்டே எட்டு நாள்கள்தான் வர்த்தக விடுமுறை தினங்கள். அவை- தைப்பொங்கல், தேசிய தினம், தமிழ் - சிங்கள புதுவருடத்துக்கு முந்திய தினம், புதுவருட தினம், மேதினம், வெசாக்கிற்கு அடுத்த நாள், நபிகள் பிறந்த தினம், கிறிஸ்மஸ் ஆகியன.

பூரணை தினங்கள் வர்த்தக விடுமுறை நாள்களாக அரசு அறிவிப்பில் தெரிவிக்கப்படவில்லை.

பூரணை தினங்களை அங்கீகரிப்பதற்கு 'போயா குழு' என்ற தனி அமைப்பு உள்ளது. அது தொடர்பான சட்டங்களில் பூரணை தினத்தை வர்த்தக விடுமுறை தினமாகவும் கருத வேண்டும் என்ற ஏற்பாடு ஏதும் உள்ளதா?

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெளிவுபடுத்துவது நல்லது.

பூரணை தினங்கள் வர்த்தக விடுமுறை நாள்கள் அல்லவெனின் அந்த நாள்களில் வர்த்தக நிலையங்களைப் பூட்டும்படி வற்புறுத்தலாமா என்று ஒரு சாரார் கேட்பதும் நியாயமானதே.

* * *

வருடப் பிறப்புக்கு முதல்நாள் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கும்படி விடுக்கப்பட்ட அறிவித்தலால் ஆங்காங்கே சர்ச்சைகள் ஏற்பட்டது எல்லோருக்கும் தெரிந்ததுதான்.

யாழ் ஆஸ்பத்திரிக்கு முன்னால் உள்ள தேநீர் கடை ஒன்று திறந்திருந்தது தொடர்பான விவகாரத்தில் ஹர்த்தாலுக்கு ஆதரவாக நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த யாழ். பல்கலைக்கழக மாணவர் அணிக்கும் தமிழ்க் குழு ஒன்றின் உறுப்பினர்களுக்கும் இடையில் வாய்த்தர்க்கம் கூட நிகழ்ந்தது.

எது, எப்படியோ ஹர்த்தால் பெருவெற்றியாக முடிந்துவிட்டது. பூரண கடையடைப்பு ஒருபுறம் நடக்க மறுபுறத்தில் அனேக இடங்களில் காதும் காதும் வைத்தால் போல - சத்தமின்றி - பின்கதவால் - ஒரு பிஸ்னஸ் நடந்தது. அதனால் மகிழ்ச்சியடைந்தவர்கள் பெருங்குடி மக்கள்.

"மதுபான நிலையங்கள் விவகாரத்தில் எல்லோரும் தாராளமாக - கண்டும் காணாதது போல - நடந்து கொண்டார்கள். அதனால் ஹர்த்தால் மகிழ்ச்சியக நடந்து முடிந்தது" - என்று 'கிக்' தந்த திருப்தியுடன் கூறினார் ஒரு பெருங்குடிமகன்.

* * *

ஆபிரிக்க நாடுகளைத் தனது கோரப் பிடிக்குள் சிக்க வைத்து மனித இனத்துக்கே சவால் விட்டு வளர்ந்து வரும் "எய்ட்ஸ்' எனும் கொடிய அரக்கன் நமது நாட்டின் மீதும் தனது கைவரிசையைக் காட்டத் தொடங்கியிருக்கின்றான்.

இதனால் இலங்கை சுகாதார, வைத்திய வட்டாரங்கள் விழிப்புடன் - முன்னெச்சரிக்கையுடன் - எய்ட்ஸ் அரக்கனுடன் எதிர்த்துப் போராட தயார் நிலையில் - செயற்பட்டுவருகின்றன. எய்ட்ஸ் நோய் பற்றிய விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் நடவடிக்கைகளும் முடுக்கிவிடப்பட்டுள்ளன. பத்திரிகைகள் உட்பட செய்தி வட்டாரங்களும் இது விடயத்தில் தம்மால் இயன்றதைச் செய்து வருகின்றன.

யாழ். ஆஸ்பத்திரி, யாழ். சுகாதாரத் திணைக்களம் ஆகியவையும் தம்மால் இயன்றளவு விழிப்புணர்வுடன் - அவதானத்துடன் - செயற்பட்டு வருகின்றன.

'எய்ட்ஸ்' பரவல் விடயம் பற்றிய சில தகவல்களை பத்திரிகையில் வெளியிடுவது சம்பந்தப்பட்ட தனிநபரினைப் பாதிப்பதாக இருக்கலாம். ஆனால் மக்களை எச்சரிப்பதற்காக சில தகவல்களை வெளியிட வேண்டியது அவசியமாகின்றது. அந்த வகையில் இத்தகவலும் மக்கள் முன் வைக்கப்படுகின்றது.

இங்கு வந்து தங்கியிருந்து பணியாற்றும் நாற்பது வயதுடைய வெளிநாட்டவர் ஒருவருக்கு எய்ட்ஸ் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து காய்ச்சல், இருமல் என்ற குணங்குறியோடு அண்மையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இவரை பரிசோதனைக்குட்படுத்திய டாக்டர்கள், இவரின் இரத்த மாதிரியை ஆய்வுகூடச் சோதனைக்கு உட்படுத்தினர். அப்போது அவருக்கு எய்ட்ஸ் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதனையடுத்து இவர் விரைவில் தனது நாட்டுக்குத் திரும்பிச் செல்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆகையால் ஒவ்வொருவரும் தங்களை ஆரோக்கிய ரீதியாகத் தற்காத்துக் கொள்வது குடாநாட்டில் அவசியமாகின்றது. வெளிநாடு போய் வந்தவர்கள் குறித்து மட்டுமன்றி வெளிநாடுகளில் இருந்து வருபவர்கள் பற்றியும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

– மின்னல்


உ
முருகன்துணை

## நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம்
### நீர்வேலி
### இரதோற்சவ விஞ்ஞாபனம்
நாளை (17-04-2000) திங்கட்கிழமை

★ காலை 5.00 மணிக்கு உதய பூசை,
தொடர்ந்து விசேட அபிடேகப் பூசைகள் இடம்பெறும்.
★ 5.45 மணிக்கு தம்ப பூசை
★ 6.00 மணிக்கு வசந்தமண்டப பூசை
★ 6.15 மணிக்கு சுவாமி உள்வீதி வலம் வருதல்
★ 7.00 மணிக்கு தேர் மண்டபம் அடைதல்
★ 7.15 மணிக்கு ரதாரோகணம்
★ 9.00 மணிக்கு சுவாமி தேரில் வலம் வருதல்

(C/11862) – பரிபாலன சபை


# பல்கலைக்கழக அனுமதியில் 2001 முதல் புதிய நடைமுறை!

## தமிழர் ஆசிரியர் சங்கத் தூதுக்குழுவிடம் அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்ரல்16

அடுத்த ஆண்டு தொடக்கம் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவுசெய்யப்படும் மாணவர்களின் அனுமதிக்குரிய மாவட்ட விகிதாசாரம் (மாவட்டக் கோட்டா) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலேயே கணிப்பிடப்படும்.

அண்மையில் கல்வி அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது இந்த முடிவு எடுக்கப்பட்டதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் த.மகாசிவம் தெரிவித்தார்.

கடந்த 10ஆம் திகதி கல்வி, உயர் கல்வி அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கக்குழுவுக்கும் அமைச்சர் ரிச்சர்ட் பத்திரனவுக்குமிடையில் சுமார் இரண்டரை மணிநேரம் பேச்சு இடம்பெற்றது.

பேச்சின்போது பலமுக்கிய விடயங்கள் ஆராயப்பட்டு அவை தொடர்பான முடிவுகள் எடுக்கப்பட்டன.

முதலாந் தவணை முடிவடைந்த நிலையிலும் வடக்கு - கிழக்கில் உள்ள பாடசாலைகளுக்கான பாடநூல்கள் முழுமையாக இன்னும் அனுப்பிவைக்கப்படவில்லை என்று தூதுக்குழுவினரால் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாக உடன் நடவடிக்கை எடுப்பதாகவும், அடுத்த தவணை ஆரம்பமாவதற்குள் பாடநூல்களை அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கல்வி அமைச்சர் உறுதியளித்தார்.

தமிழ் மொழி மூல பாடநூல்களில் இடம்பெற்றுள்ள பிழைகள் அமைச்சரின் கவனத்துக்கு தூதுக்குழுவினரால் கொண்டுவரப்பட்டது. பிழைகளைத் திருத்துவதற்காக 7 பேர் கொண்ட குழு ஒன்றை நியமிப்பதற்கு இணக்கம் காணப்பட்டது. அதில் இருவர் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளாவர். மேலதிகமாக குழுவுக்கு ஆள்கள் தேவைப்படின் தாம் வழங்கத் தயாராக இருப்பதாக தூதுக்குழுவினர் தெரிவித்தனர்.

சிங்கள அதிபர்கள் இருக்கும் தமிழ் பாடசாலைகளின் பெயர்களை உடனடியாக சமர்ப்பிக்கும்படியும் அத்தகைய பாடசாலைகளுக்கு தமிழ் ஆசிரியர்களை நியமிக்க மாகாணக் கல்விப் பணிமனைக்கு கல்வி அமைச்சு கட்டளை இடும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

1993ஆம் ஆண்டில் இரண்டாம், மூன்றாந் தர அதிபர்களாக நியமனம் பெற்றவர்களுக்கும் 91இல் இரண்டாம் தர அதிபர்களாக நியமனம் பெற்றவர்களுக்கும் மிக விரைவில் நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டு அவர்கள் மிக விரைவில் அடுத்த தரத்துக்குப் பதவி உயர்த்தப்படுவர்.

இடர்காலக் கொடுப்பனவுக்கென 23 கோடி ரூபாவை திறைசேரியுடன் கதைத்து மாகாண அலுவல்கள் அமைச்சுக்குப் பணமாக அனுப்பப்பட்டது. மாகாண ஆளுநருடன் தொடர்பு கொண்டு அந்தப் பணத்தை விரைவாகப் பெற்று ஆசிரியர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்குக்கு வெளியில் உள்ள மாகாணங்களில் உள்ள ஒவ்வொரு கல்வி வலயத்திலும் உள்ள தமிழ் பாடசாலைகளையும் மேற்பார்வை செய்ய தமிழ் மொழி மூலமான உதவிக் கல்விப் பணிப்பாளர் ஒருவரை நியமிக்க கொள்கை அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

கொழும்பில் உள்ள தமிழ் மாணவர்கள் இனிவரும் காலங்களில் படையினரால் கைது செய்யப்பட்டால், குறித்த மாணவன் கல்வி கற்கும் பாடசாலையின் அதிபரின் அறிக்கை பெறப்பட்டு அதன் அடிப்படையில் விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும் என்றும் கைது செய்யப்பட்ட மாணவரின் பெற்றோருக்கு உடனடியாக தகவல் தெரிவிக்கப்பட வேண்டும் என்றும் கல்வி அமைச்சருக்கு எடுத்துக் கூறப்பட்டது.

இந்தக் கருத்தை ஏற்றுக் கொண்ட அமைச்சர் இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார்.

வன்னியில் உள்ள பாடசாலை ஆசிரியர்களுக்கான சம்பளப் பணத்தை பணமாக அனுப்பிவைக்க வேண்டும் என்றும் அமைச்சரிடம் இந்த சந்திப்பின்போது கோரிக்கை விடப்பட்டது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவர் சி.குமரகுருதாஸன் தலைமையில் சென்ற இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கக் குழுவில் பொதுச் செயலாளர் த.மகாசிவம், துணைப்பொதுச் செயலாளர் கணேசராசா, நிர்வாகச் செயலாளர் சரவணபவானந்தன், பத்திரிகைச் செயலாளர் எஸ்.கே.சதாசிவம், பிரசார செயலாளர் வீ.ரி.சகாதேவராஜா ஆகியோர் கலந்துகொண்டனர்.

தேசிய கல்வி ஆணைக்குழுத் தலைவர் பேராசிரியர் லக்ஸ்மன் ஜெயதிலக, கல்வி வெளியீட்டு திணைக்கள ஆணையாளர் நாயகம் ஈ.டபிள்யூ.அபயநாயக்க, பிரதம கணக்காளர் சுபசிங்க, மேலதிக செயலாளர் உபசேன சேனநாயக்க ஆகியோர் கல்வி அமைச்சின் சார்பில் அமைச்சருடன் கலந்துகொண்டனர்.

(இ-9)

## கைதானவர் காங்கேசனுக்கு

கடந்த 4ஆம் திகதி படையினரால் கைது செய்யப்பட்ட நீர்வேலி தெற்கைச் சேர்ந்த அன்ரன் அமலதாஸ் லோறன்ஸ் (வயது 20) என்ற இளைஞன் கடந்த 11ஆம் திகதி காங்கேசன்துறை தடைமுகாமுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார் என்று மனித உரிமை ஆணைக்குழு அதிகாரி தெரிவித்தார். (இ-9)

## திறப்புவிழா

வடபிராந்திய போக்குவரத்துச் சபை பருத்தித்துறைச்சாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பொறியியல் பகுதி வேலைத்தள திறப்பு விழா நாளை காலை 10.00 மணிக்கு பருத்தித்துறைச்சாலை முகாமையாளர் செ.கமலநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடபிராந்திய போக்குவரத்துச்சபை பொதுமுகாமையாளர் வி.எஸ்.சொக்கலிங்கமும், கௌரவ விருந்தினர்களாக யாழ். அரச அதிபர் க.சண்முகநாதனும் பருத்தித்துறை பிரதேசசெயலர் ஆ.சிவசுவாமியும் கலந்துகொள்ளவுள்ளனர்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி நவரத்தினம் திலகராணி

மாதகல் மேற்கைப் பிறப்பிடமாகவும் அராலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நவரத்தினம் திலகராணி நேற்று (15-04-2000) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் கு.நவரத்தினத்தின் அன்பு மனைவியும், சதாசிவம் - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகளும், கங்கைஅமரன், அமரர் கங்கைதாசன், கங்கைரூபன் ஆகியோரின் அன்புத் தாயாரும், இதயராணி (சுவிஸ்), தவராணி (ஆசிரியை நுணசை ம.வி. மாதகல்), பவளகாந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சுமிதா, சுகந்தன், ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (15-04-2000) சனிக்கிழமை நடைபெற்று பூதவுடல் பூனாமடை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சிற்பக்கலைஞர் கு.நவரத்தினம்.

*கங்கை கலாலயம்,*
*அராலி தெற்கு.*
(75454)

## திருமதி கந்தையா சிவகாமிப்பிள்ளை

இணுவிலைப் பிறப்பிடமாகவும் தாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா சிவகாமிப்பிள்ளை அவர்கள் நேற்று (15-04-2000) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற M.S.கந்தையா (தாவடி, பிரபல சுருட்டுத் தொழில் அதிபர்)அவர்களின் அன்புமிகு மனைவியும், செல்லத்துரை, மகேஸ்வரி, சுப்ரமணியம் (கனடா), மகேஸ்வரன் (வடமாநிலப் பொறுப்பதிகாரி, இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம்), மகாலிங்கம் (பொறியியலாளர், பாரெயின்), முத்துலிங்கம்(பிரபல வர்த்தகர்), மோகனதாஸ் (ஆசிரியர், கொக்குவில் இந்துக்கல்லூரி), காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரன், நித்தியானந்தன், சண்முகநாதன், மற்றும் இராஜேஸ்வரி, கௌரி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற இராஜலக்சுமி, காலஞ்சென்ற P.M.இராசரத்தினம், பரமேஸ்வரி, ரஞ்சனா, செல்வராணி, அருந்ததி, சசிகலா, தங்கராணி, ஸ்ரீகணேசன் (யாழ். லயன்ஸ் - உரிமையாளர், பரணி மருந்தகம்), சுந்தரமோகன் (ஜேர்மனி) ஆகியோரின் அருமைமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (16-04-2000) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
எம்.எஸ்.கே.மகேஸ்வரன்.
எம்.எஸ்.கே.முத்துலிங்கம்.

*கே.கே.எஸ் வீதி,*
*தாவடிச்சந்தி,*
*கொக்குவில்.*
T.P.NO-3540 (75460)

## திருமதி பொன்னம்மா குணரத்தினம்

ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் மாவிட்டபுரத்தை வசிப்பிடமாகக் கொண்டவரும் தற்போது கொக்குவிலில் வசித்தவருமான திருமதி பொன்னம்மா குணரத்தினம் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா - விசாலாட்சி (ஆசிரியர்) தம்பதியினரின் மகளும், காலஞ்சென்ற குணரத்தினத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இராசையா (கூட்டுறவுப் பரிசோதகர், சுதுமலை), சின்னத்துரை (மதுபானக் கட்டுப்பாட்டு அதிகாரி, ஓட்டுமடம்), செல்லையா (அதிபர், ஆனைக்கோட்டை), தங்கம்மா (ஆசிரியர், ஆனைக்கோட்டை), செல்வநாயகம் (போதனா ஆசிரியர், வீமன்காமம்) ஆகியோரின் சகோதரியும், கு.நவரத்தினராஜா (யாழ்.போதனா வைத்தியசாலை), சு.ராஜேஸ்வரி, சி.ரஞ்சிதாதேவி, கு.நடராஜா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், ந.லோஜினி, சு.சுந்தரலிங்கம் (செல்வம் பற்றிசாச் உரிமையாளர்), ச.சிவானந்தம் (U.N.D.P), யசோ (ஆஸ்திரேலியா) ஆகியோரின் மாமியாரும், ந.தர்சினி, சு.சுஜன், நிரோஜாஅபிசேச் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதிக்கிரியைகளுக்காக இன்று (16-04-2000) ஞாயிற்றுக்கிழமை பி.ப.1.00 மணிக்கு கோம்பையன்மணல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கு.நவரத்தினராஜா
(மகன்)

*ஆனைக்கோட்டை வீதி,*
*குளப்பிட்டிச் சந்தி,*
*கொக்குவில்.*
(75462)

# 18 நாள்களின் பின்னர் மீண்டும் பளை ஆஸ்பத்திரி இயங்க ஆரம்பம்

தென்மராட்சி,ஏப்.16

பதினெட்டு நாள்களின் பின் கடந்த வியாழக்கிழமை முதல பளை வைத்தியசாலை இயங்கத் தொடங்கியுள்ளது.

ஆஸ்பத்திரி ஊழியர்கள் சிலர் கிளாலி ஊடான பாதையால் சென்றதையடுத்து ஆஸ்பத்திரியின் வெளிநோயாளர் பிரிவு இயங்கத் தொடங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது. கடந்த வியாழக்கிழமை 60க்கு மேற்பட்ட நோயாளர்கள் சிகிச்சை பெற்றதாகவும் கூறப்பட்டது.

ஆஸ்பத்திரியில் டாக்டர் ச.அம்பிகைபாகன் தங்கியிருந்து நோயாளர்களுக்கு சிகிச்சை அளித்து வருகின்றார்.

## கரை ஒதுங்கிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடியாத நிலையில் இருந்த நான்கு சடலங்களை நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்த கடற்படையினர் இவற்றை அடக்கம் செய்வதற்கான அனுமதியை வழங்குமாறு யாழ்.நீதிவான் இ.த.விக்னராஜாவிடம் விண்ணப்பித்தனர்.

அடையாளம் காணக்கூடிய நிலையில் இருந்த ஏனைய மூன்று சடலங்களையும் அவர்களது உறவினர்களிடம் ஒப்படைத்துள்ளதாகவும் கடற்படையினர் நீதிவான் முன்னிலையில் தெரிவித்தனர்.

கடற்படையினரின் விண்ணப்பத்தினை ஏற்றுக்கொண்ட நீதிவான் பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசுவை இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் வைத்து விசாரணை நடத்திய பதில் நீதிவான் நான்கு சடலங்களும் பழுதான நிலையில் உள்ளதையும், அடையாளம் காணமுடியாதுள்ளதையும் ஏற்றுக் கொண்டு கீரிமலை மயானத்தில் இச்சடலங்களை புதைக்குமாறு உத்தரவிட்டார்.

இந்தச் சடலங்கள் நான்கும் புதைப்பதற்காக ஒப்படைக்கப்பட்டன. (இ-5-15-139-9-10)

## கிரிக்கெட்

நல்லூர் ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

* காலை 9-00 மணிக்கு - திருநெல்வேலி மத்திய வி.க.எதிர் கலைமகள் வி.க.
* முற்பகல் 10-30 மணிக்கு - ஜெட்லைனர்ஸ் வி.க. எதிர் கொய்யாத்தோட்டம் ஐக்கிய வி.க. 'ஏ' அணி.
* நண்பகல் 12-00 மணிக்கு - வெங்கடேஸ்வரா வி.க. எதிர் விநாயகர் வி.க. 'பி' அணி.
* பிற்பகல் 2-00 மணிக்கு - யுத்காமல் வி.க. அணி எதிர் ஸ்புட்னிக் வி.க. 'ஏ' அணி.

(இவை யாவும் கனகரத்தினம் ம.ம.வி.மைதானத்தில் நடைபெறும்.)

* காலை 9-00 மணிக்கு - கோல்ட் ஸ்ரார்ஸ் வி.க. எதிர் தபாலகம் வி.க. அணி.
* முற்பகல் 10-30 மணிக்கு - வை.எம்.எச்.ஏ. வி.க. அணி எதிர் ஸ்புட்னிக் வி.க. 'பி' அணி.
* நண்பகல் 12-00 மணிக்கு - ஜி.ரி.இசட் வி.க. அணி எதிர் வானவில் வி.க. அணி.
* பிற்பகல் 2-00 மணிக்கு - பெப்ஸி வி.க. அணி எதிர் வில்ஸ் வி.க. 'பி' அணி.
* மாலை 4-00 மணிக்கு - நல்லூர் ஐக்கிய வி.க. 'ஏ' அணி எதிர் யுனிபைட் வி.க. அணி.

(இவை அனைத்தும் விநாயகர் வி.க.மைதானத்தில் நடைபெறும்.

# குடாநாட்டில் பெற்றோலுக்கு தொடர்ந்து பெரும் தட்டுப்பாடு

அரியாலை,ஏப்.16

யாழ்.நகரில் பெற்றோலுக்கு தொடர்ந்து தட்டுப்பாடு நிலவி வருகிறது.

கடந்த புதன்கிழமை இலங்கை பெற்றோலியம் கூட்டுத்தாபனத்தால் 5பெரல்கள் வீதம் குடாநாட்டிலுள்ள சகல எரிபொருள் நிலையங்களுக்கும் பெற்றோல் வழங்கப்பட்டது.

எரிபொருள் விற்பனவு நிலையங்களில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பொதுமக்களுக்கு பெற்றோல் வழங்கப்பட்டது. எனினும் குறுகிய காலத்திலேயே அனைத்துப் பெற்றோலும் விற்றுத் தீர்ந்து விட்டதாக எரிபொருள் நிலையங்களில் தெரிவிக்கப்பட்டது.

வெளிச்சந்தையில் பெற்றோல் 160 ரூபா முதல்170 ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இதற்கிடையில் எரிபொருளுடன் கப்பல் ஒன்று வந்துள்ளதாகவும் அடுத்த சில நாள்களில் பெற்றோல் தட்டுப்பாடு நீங்கிவிடும் என்றும் சிவில் நிர்வாக அதிகாரி தெரிவித்தார். (இ-6-17-139)

## உதைபந்தாட்ட போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஏப்.16

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று ஞாயிற்றுக் கிழமை நடைபெறும் ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

* மாலை 4.00 மணிக்கு - 'பி' பிரிவு - சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழகம் எதிர் கலைவாணி வி.க.
* மாலை 5.00 மணிக்கு 'ஏ' பிரிவு - பல்கலைக்கழகம் எதிர் பாடும் மீன் வி.க. (ஐ-4)

## நிரந்தர தீர்வை எட்டிய.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேட்டியில் கூறியிருந்தார்.

அதற்கு பதிலளிக்கும் வகையில் வெளிவிவகார அமைச்சு வெளியிட்ட அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

விடுதலைப் புலிகள் அமைப்புத் தொடர்பாக வெளிநாடுகளில் உயர் கரிசனையை ஏற்படுத்தும் விதத்தில் அன்ரன் பாலசிங்கத்தின் தகவல்கள் அமைந்திருக்கின்றன.

புலிகள் அமைப்பினர் தமதுவன்முறைகளையும் நாசகாரச் செயல்களையும் தொடர்ந்தபோதும் நாடளாவியரீதியில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலமாகவே இருக்கின்றன.

நாட்டு மக்களை அதிலும் குறிப்பாக குடாநாட்டு மக்களைப் பாதுகாக்கும் பொறுப்பில் இருந்து நழுவிச் செல்ல அரசாங்கத்துக்கு எந்தவித தார்மீக உரிமையும் கிடையாது.

வடபகுதிக்கு எடுத்துச்செல்லப்படுவதற்கு 1995ஆம் ஆண்டு வரை 75 வகையான பொருள்களுக்கு தடைவிதிக்கப்பட்டிருந்தது.ஆனால் இது தற்பொழுது 8 பொருள்களாக குறைக்கப்பட்டுள்ளது.

யுத்தக்கைதிகள் பரிமாறல், சர்வதேச மேற்பார்வையின் கீழ் யுத்த நிறுத்தம், துருப்புக்களை முகாம்களுக்குள் முடக்கிவைத்தல்போன்ற எந்தஒரு விடயம் தொடர்பாகவும் நோர்வே அரசு மூலம் புலிகள் இயக்கம் அரசாங்கத்துக்கு எந்த அறிவித்தலையும் இதுவரை வழங்கவில்லை.

உத்தேச பேச்சுக்கள் வெற்றிகரமாகச் செயற்படுத்தப்படும்போது மட்டுமே இத்தகைய விடயங்கள் தொடர்பாக கரிசனை கொள்ள முடியும்.அதேபோன்று நிரந்தர அரசியல் தீர்வு ஒன்றை எய்திய பின்னரே படை வாபஸ் இடம்பெறமுடியும். பெரும்பாலான இலங்கை மக்கள் கௌரவத்துடனான சமாதானத்தையே விரும்புகிறார்கள் என்று அரசு நம்புகின்றது.

இதனை அடைவதற்காக தன்னாலான அனைத்து முயற்சிகளையும் அரசு எடுத்திருக்கின்றது.

இதனை நோக்கமாகக்கொண்டு புலிகள் இயக்கத்துடன் பேச நோர்வே அரசை ஒரு மத்தியஸ்தராகப் பணியாற்றுமாறு இலங்கை ஜனாதிபதி கேட்டுக்கொண்டார்.

புலிகள் அமைப்பும் பேச்சுக்களில் அக்கறை கொண்டிருப்பதை அறிந்து கொண்டபின்னரே நோர்வே அரசு மத்தியஸ்தம் வகிக்க முன்வந்தது. ஆனால் இத்தகைய சூழ்நிலையில் அன்ரன் பாலசிங்கத்தின் அறிக்கை, பேச்சுக்கள் மூலமான சமாதான ஏற்பாடுகளில் புலிகளுக்கு இருக்கும் நேர்மையான குறிக்கோளை சந்தேகம் கொள்ளச் செய்கின்றது.

கௌரவமான சமாதானத்தை எட்டுவதற்காக புலிகள் இயக்கத்தின் நெருக்குதலை அதிகப்படுத்தும் ஓர் அறிக்கையாக இதனை கொள்ளமுடியவில்லை.

இப்படி வெளிவிவகார அமைச்சின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-6)


கலைவாணி கல்வி நிலையம்
கோப்பாய்

O/L DAY CLASS 2000
ஆரம்பம்: 17-04-2000
திங்கள் 8.00 மணி

A/L 2002
கலை, வர்த்தக வகுப்புக்கள்
ஆரம்பம்: 17-04-2000
திங்கள் 3.30 மணி

எமது ஆசிரியர் குழு

Tam - பண்டிதர் மாவை லிங்கம்
Hindu, Hindu Cul. - S.சுரேன்
Log - T.சசிகலா
Dra - S.சத்தியா
Geo, CGP - I.S.ஜெகன்
His - P.வாகீசன்
Acc - P.கணேஷ்
Eco - S.விக்கி
Com - A.ஆனந்தராசா

(C/11853)



வீடியோ CD வெளியீடு

★ வாலிப தாகம்
★ ஏழு இரவுகள்
★ ரியூசன் ரீச்சர்
★ இளமைக்கு ஒரு எச்சரிக்கை

ஐங்கரன் வெளியீடு
விஜய் நடித்த
★ கண்ணுக்குள் நிலவு

புதிய படப் போஸ்டர்கள் விற்பனைக்குண்டு
விஷ்ணு வீடியோ
K.K.S. றோட்,
கோண்டாவில்.
(75463)



எமது புதிய வீடியோ CD வெளியீடு

★ LAKE PLACID
★ HOWLING V
★ DEATH BEFORE DISHONER
★TWINKLE TWINKLE LUCKY STARS
★ BATS
★ BLACK MASK

பிறிட் CD வெளியீடு
★ ஆண்பாவம்
★ நினைக்கத் தெரிந்த மனமே
★ வீரபாண்டியன்
★ விஸ்வநாதன் வேலை வேண்டும்

ஆர்க் வீடியோ லைபிறறி
51, அம்மன் வீதி,
யாழ்ப்பாணம்.
(C/11861)



நிரு ரியூசன் சென்ரர்
கோண்டாவில்

O/L DAY CLASS

ஆரம்பம்: 18-04-2000
செவ்வாய் காலை 8.00
(வழமையான ஆசிரியர் குழு)

(75427) - நிர்வாகி



Institute of Informatics studies
Jaffna, Sri Lanka.
(Affiliated with IMIS, UK)

Telephone: 2831    E-mail : iis@sltnet.lk

**National Certificate in Computer Applications (NCCA)**

கல்வி, உயர் கல்வி அமைச்சும், தேசிய கல்வி நிறுவகமும் இணைந்து நடாத்தும் கணணிப் பிரயோகங்களுக்கான பரீட்சைகள் கடந்த ஆண்டுகளில் யாழ் மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் நடாத்தப்பட்டு வந்தது நாம் அறிந்ததே. இவ்வாண்டு இப்பரீட்சைகளானது யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அதிபரின் முன் முயற்சியினால் யாழ் மாவட்டத்திலேயே நடாத்தப்பட உள்ளது.

மேற்படி பரீட்சையானது இரு நிலைகளைக் கொண்டுள்ளது.

1. ஆரம்ப நிலை (Basic level)
2. இடை நிலை (Intermediate level)

ஆரம்ப நிலை (Basic Level)

தோற்றத் தகுதியானவர்கள் :G. C. E (O/L) சித்தி அடைந்தோர்

பரீட்சைக்கு தோற்ற வேண்டிய பாடங்கள்:
1) Computer Basic and Operating Systems.
2) Application Software
3) Programming Concepts and programming.

இடை நிலை (Intermediate Level)

தோற்றத் தகுதியானவர்கள் :G. C. E (A/L) சித்தி அடைந்தோர்.

பரீட்சைக்கு தோற்ற வேண்டிய பாடங்கள்:
1) Computer Studies
2) Application Software
3) Programming Design and Programming.

- இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க விரும்பும் மாணவர்கள் 28-04-2000 (வெள்ளிக்கிழமை) க்கு முன்னதாக தமது பதிவினை எமது நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தில் மேற் கொள்ளலாம். விண்ணப்பப்படிவங்கள் 17-04-2000 முதல் எமது அலுவலகங்களில பெற்றுக்கொள்ளலாம்.
- இப்பரீட்சை தொடர்பான விரிவுரைகள் கருத்தரங்குகள், மீட்டல்கள், பரீட்சைக்கான முன் ஆயத்தங்கள் அனைத்தும் எமது நிறுவனத்தினாலேயே மேற்கொண்டு தரப்படும்.
- பரீட்சை இடம் பெறும் காலம் : நவம்பர், 2000
- பரீட்சை நிலையம் : யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.
- மேற்படி பரீட்சை தொடர்பான விசேட கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 23-04-2000 காலை 10.30 மணிக்கு தலைமை நிறுவனத்தில் இடம்பெறும். தவறாது சமுகம் தரவும்.

மேலதிக விபரங்களுக்கு . . . . .

இயக்குனர்,
IIS, 100, மணிக்கூட்டுவீதி,
யாழ்ப்பாணம்.



BITSMANS
கல்வி நிறுவனம்
மானிப்பாய்

A/L 2002 ஆரம்பம்: 19.04.2000 மாலை 4.00 மணி

| ★கணித ★உயிரியல் | | ★கலை ★வர்த்தகம் | |
|---|---|---|---|
| பௌதிகம் | ஜெயசீலன் | தமிழ் | N.பாலா |
| இரசாயனம் | எட்வேட் | அளவையியல் | R.P.சர்மா |
| இணைந்தகணிதம் | ஐங்கரன் | இந்துநாகரிகம் | N.பாலா |
| உயிரியல் | ஞானேந்திரன் | பொருளியல் | சண் |
| | தயாபரன் | கணக்கீடு | N.இராஜன் |
| பொது வினா | தவசேகர் | வணிகக் கல்வி | சத்தி |
| கிறிஸ்தவம் | செல்வி ஏன்சன்சலின் | வரலாறு | அன்ரன் |
| | | புவியியல் | ஞானேஸ்வரன் |
| | | நாடகஅரங்கியலும் | சுகந்தன் |

(C/11851)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16-04-2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.